Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 6-00

சுடர்: 12 வள்ளுவர் ஆண்டு 2028 மாசி 07 செவ்வாய்க்கிழமை (18-02-1997) UTHAYAN A Lively National Tamil Daily கதிர்: 83

# "ரைஸ்ரார்" ஜெட் விமானம் மயிரிழையில் நேற்று தப்பியது

## நிலத்தில் மோதி முன் பக்கம் சேதம்

கொழும்பு, பெப்ரவரி 18

எயர் லங்கா நிறுவனத்துக்குச் சொந்தமான "ரைஸ்ரார்" ஜெட்விமானம் ஒன்று நேற்று கட்டுநாயக்கா சர்வதேச விமான நிலையத்தில் தரை இறங்கியபோது விபத்தில் இருந்து மயிரிழையில் தப்பியது.

இந்த விமானம் தரை இறங்கியபோது அதன் முன் சக்கரங்கள் பழுதடைந்ததால் விமானத்தின் முன் பகுதி நிலத்தில் மோதியது.

இஸ்ரேல் தயாரிப்பு தானியங்கி உளவு (யு. ஏ. ஈ) விமானம் ஒன்று அநுராதபுரம் விமான நிலையப் பகுதியில் விழுந்து நொறுங்கியதாகச் செய்தி வெளியாகி 24 மணி நேரத்துக்குள் இந்த ''ரைஸ்ரார்'' ஜெட் விமானம் பற்றிய செய்தியும் வெளிவந்துள்ளது.

நேற்று வவுனியாவிலிருந்து புறப்பட்டு வந்த இந்த ''ரைஸ்ரார்'' விமானம் கட்டுநாயக்கா சர்வதேச விமான நிலையத்தில் மோதிய போது அந்த விமானத்தில் எத்தனை பேர் இருந்தார்கள் என்ற தகவல் எதுவும் வெளியிடப்படவில்லை.

இந்த வருடம் இது ஐந்தாவது விமான

(8 ஆம் பக்கம் பார்க்க)

# வாழைச்சேனை தமிழ்ப்பகுதிகளில் ஷெல் மற்றும் கிரனேட் தாக்குதல்கள்

## 12 பொதுமக்கள் காயமடைந்தனர்

கொழும்பு, பெப். 18

வாழைச்சேனை தமிழ்ப் பகுதி மீது கடந்த சனி இரவும் ஞாயிறு முற்பகலும் நடத்தப்பட்ட ஷெல் மற்றும் கிரனேட் வீச்சுத் தாக்குதல்களில் 12 பொதுமக்கள் காயமடைந்தனர்; இரு வீடுகள் சேதமடைந்தன.

சனி இரவு பத்து மணியளவில் வாழைச்சேனை, பிறைந்துறைச்சேனைப் பகுதியில் திடீரென விழுந்த ஷெல்களினால் இரு பொதுமக்கள் காயமடைந்தனர்; இரு வீடுகள் சேதமடைந்தன. காயமுற்றவர்கள் மாஞ்சோலை ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டனர்.

ஞாயிறு காலை 9.30 மணிக்கு வாழைச்சேனை பிரதான வீதியில் உள்ள தமிழ்ச் சந்தை மீது இனந்தெரியாதோர் கிரனேட் வீச்சு நடத்தியதில் பத்து அப்பாவிப்

(8 ஆம் பக்கம் பார்க்க)

## முச்சந்தி முரளி



அப்ப விலை வாசியுடன் கப்பல் கட்டணமும் போட்டி போல......!

# தந்தை செல்வா நூற்றாண்டு சிறப்பாகக் கொண்டாட ஏற்பாடு!

## கொழும்பில் "தேசிய சபை" அமைப்பு

கொழும், பெப். 18

எதிர்வரும் மார்ச் 31 ஆம் திகதி ஆரம்பமாகும் தந்தை செல்வாவின் நூற்றாண்டை சிறப்பாகக் கொண்டாடுவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டிருப்பதாக அறிவிக்கப்படுகின்றது.

இது தொடர்பாக ஆராய்வதற்கு கடந்த ஞாயிறன்று பம்பலப்பிட்டி இந்துக்கல்லூரியில் நடைபெற்ற பூர்வாங்கக் கூட்டம் ஒன்றில் 'தந்தை செல்வா நூற்றாண்டு தேசிய சபை' அமைக்கப்பட்டது.

இந்த பூர்வாங்கக் கூட்டத்துக்கு வி. எஸ். துரைராஜா தலைமை வகித்தார்.

தேசிய சபை நிர்வாகிகளாகப் பின்வருவோர் தெரிவு செய்யப்பட்டனர்.

தலைவர்:- எம். சிவசிதம்பரம்.

(8ஆம் பக்கம் பார்க்க)

# வடக்கு அபிவிருத்திப் பணிகளுக்கு அதிகாரசபை அமைக்க வேண்டும்

## ஜனாதிபதியிடம் புளொட் வலியுறுத்து

வடமாகாண புனர்வாழ்வு, புனரமைப்பு அதிகார சபை முழு அளவில் செயற்படவில்லை. அதனால், வடக்கில் அபிவிருத்திப் பணிகள் துரிதமாக மேற்கொள்ளப்பட வேண்டுமானால் அபிவிருத்தி அதிகார சபை ஒன்று அமைக்கப்பட வேண்டும்.

இவ்வாறு தமிழீழ மக்கள் விடுதலைக் கழகம் (புளொட்) ஜனாதிபதியிடம் வலியுறுத்தி உள்ளது.

இது தொடர்பாகக் கழகத்தின் உப தலைவர் என். மாணிக்கதாசன் ஜனாதிபதிக்கு விரிவான கடிதம் ஒன்றை அனுப்பியுள்ளார்.

அந்தக் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

வடக்கில் அபிவிருத்திப் பணிகள் துரிதமாக மேற்கொள்ளப்பட வேண்டுமானால் அபிவிருத்தி அதிகார சபை ஒன்று அமைக்கப்பட வேண்டும்.

(7 ஆம் பக்கம் பார்க்க)

## கப்பல் கட்டணம் அதிகரிப்பு!

யாழ்ப்பாணம், பெப். 18

யாழ். மாவட்டத்தில் இருந்து வெளிமாவட்டங்களுக்கு கப்பலில் பயணிகள் செல்வதற்கான கட்டணங்கள் அத்தியாவசிய சேவைகள் ஆணையாளரின் பணிப்புக்குஇணங்க அதிகரிக்கப்பட்டுள்ளன என்று யாழ். அரச அதிபரின் செய்திக் குறிப்பு ஒன்று தெரிவிக்கிறது.

(8 ஆம் பக்கம் பார்க்க)

## நாலந்த எல்லாவெல கொலை:

# முன்னாள் மேயர் சரணடைந்தார்!

கொழும்பு, பெப். 18

இரத்தினபுரி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் நாலந்த எல்லாவெலவின் படுகொலை தொடர்பாக தேடப்பட்டுவந்த முக்கிய சந்தேக நபர்களில் ஒருவரான இரத்தினபுரி மாநகர சபையின் முன்னாள் மேயர் மகிந்த ரட்ணதிலக நேற்று முன்தினம் நள்ளிரவு கோட்டை நீதிவான் அருணகிரி ரணசிங்க முன்னிலையில் சரணடைந்தார்.

மகிந்த ரட்ணதிலக முதலில் வெலிக்கடை சிறைச்சாலைக்குக் கொண்டு செல்லப்பட்டார்.

அங்கிருந்து பின்னர் மகர சிறைச்சாலைக்கு இடம்மாற்றப்பட்டார்.

மகிந்தரட்ணதிலகவின் வாக்கு மூலத்தைப் பதிவு செய்வதற்கான அனுமதியையும் நீதிவான் இரகசியப்

(8ஆம் பக்கம் பார்க்க)

# உயிருக்கு உத்தரவாதமளித்தால் பொலீஸாரிடம் சரணடைய தயார்!

## தலைமறைவான புஞ்சிநிலமே செய்தி

கொழும்பு, பெப். 18

''எனக்கு எதிராக அரசாங்கம் மேற்கொள்ளும் பொய்ப் பிரசாரத்தை நிறுத்தி, எனது உயிருக்கு உத்தரவாதமளித்தால் நான் சரணடையத் தயாராக இருக்கின்றேன்.''

இரத்தினபுரி மாவட்ட ஐ. தே. கட்சி எம். பியான சுஸந்த புஞ்சிநிலமே தனது சட்டத்தரணி தயாபெரேரா மூலம் சட்டமா அதிபர் சரத் என். சில்வாவுக்கு இவ்வாறு செய்தி ஒன்றை அனுப்பி வைத்திருக்கின்றார்.

பொதுமக்கள் ஐக்கிய முன்னணியின் இரத்தினபுரி மாவட்ட எம். பியான நாலந்தா எல்லாவெல படுகொலை செய்யப்பட்ட சம்பவம் தொடர்பாக சுஸந்த புஞ்சிநிலமேயை பொலீஸார் தேடி வருவது தெரிந்ததே.

தமது சட்டத்தரணி மூலம் சட்டமா அதிபருக்குஅனுப்பி வைத்துள்ள செய்தியில் சுஸந்த புஞ்சிநிலமே மேலும்

(8ஆம் பக்கம் பார்க்க)

# யாழ். ஆஸ்பத்திரியில் 5சடலங்கள்ஒப்படைப்பு

யாழ்ப்பாணம், பெப். 18

தென்மராட்சிப் பகுதியில் மூன்று இடங்களில் இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டுச் சம்பவங்களில் இறந்ததாக 5 சடலங்கள் நேற்றும், நேற்று முன்தினமும், யாழ். ஆஸ்பத்திரியில் சாவகச்சேரிப் பொலீஸாரால் ஒப்படைக்கப்பட்டன,

பளைப் பகுதியில் கடந்த சனிக்கிழமை அதிகாலை இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தில் உயிரிழந்ததாக, மூன்று சடலங்கள் நேற்று மாலை சாவகச்சேரிப் பொலீஸாரால் ஒப்

(8 ஆம் பக்கம் பார்க்க)

# இரு பொலீஸ் அரண்கள் மீது ஒரே தடவையில் தாக்குதல்

கொழும்பு, பெப். 18

நேற்று முன்தினம் மாலை விடுதலைப் புலிகள் பாண்டிருப்பு, கல்முனை பிரதேசங்களில் அமைந்துள்ள பொலீஸ் அரண்கள் மீது ஒரே சமயத்தில் தாக்குதல் நடத்தினர் என்று பாதுகாப்பு அமைச்சின் நடவடிக்கைத் தலைமையகம் தெரிவித்துள்ளது.

சுமார் 2 மணித்தியாலங்கள் நடந்த இத்தாக்குதலில் பொலீஸார் இருவர் காயம

(8 ஆம் பக்கம் பார்க்க)

# நிபந்தனையற்ற ஆதரவு காங்கிரஸ் விலக்கியது

புதுடில்லி, பெப். 18

தேவகௌடா தலைமையிலான ஐக்கிய முன்னணி அரசுக்கு இதுவரை வழங்கிவந்த நிபந்தனை அற்ற ஆதரவை காங்கிரஸ் விலக்கிக் கொண்டுள்ளது.

சீதாராம் கேசரி தலைமையில் நேற்று முன்தினம் இரவு புதுடில்லியில் நடைபெற்ற காங்கிரஸ் செயற்குழுக் கூட்

(8 ஆம் பக்கம் பார்க்க )

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்கள்

## திருமதி மகேஸ்வரி தெய்வதவபாலன்
(இளைப்பாறிய ஆசிரியை)

செட்டியகுறிச்சி, பண்டத்தரிப்பைச் சேர்ந்த திருமதி மகேஸ்வரி தெய்வதவபாலன் 17-02-97இல் காலமானார்.

இவர் திரு. தெய்வதவபாலனின் (ஆங்கில ஆசிரியர்) அருமை மனைவியும், திலீபன் (ஆசிரியர், வட்டு இந்துக்கல்லூரி), தெய்வசக்தி (ஆசிரியை, மகாஜனக் கல்லூரி), சுதர்சனா, யமுனா (விஞ்ஞானபீடம், யாழ். பல்கலைக்கழகம்), யாதவன் (பிரான்ஸ்) ஆகியோரின் பாசமிகு தாயாரும், காலஞ்சென்ற சட்டத்தரணி தியாகராசா, சுப்பிரமணியம் (காப்புறுதிக் கூட்டுத்தாபனம், வவுனியா), ஜெகதீஸ்வரி (பிரான்ஸ்) ஆகியோரின் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 17-02-97 நேற்று திருவடிநிலையில் நடைபெற்றன.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு வேண்டுகின்றோம்.

தகவல்:
தெ திலீபன்.
(மகன்)

செட்டிய குறிச்சி,
பண்டத்தரிப்பு. (9293)

## திருமதி நாகரத்தினம் சிவபாக்கியம்

8ஆம் கட்டை தெல்லிப்பழையைச் சேர்ந்ததிருமதி நாகரத்தினம் சிவபாக்கியம் அவர்கள் 15 - 02 – 1997 சனிக்கிழமை சிவபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற நாகரத்தினம் (மலாயன் பென்ஷனியர்)அவர்களின் அன்புமனைவியும், பராசக்தி, கங்காதேவி (யாழ். நகர அபிவிருத்தி அதிகாரசபை), பாலசுப்பிரமணியம் (கொழும்பு) ஆகியோரின் பாசமிகு தாயாரும், விமலராஜா (ப. அ. பு. வா. நிறுவனம்) மிலானி ஆகியோரின் அன்பு மாமியும், சஞ்ஜீவன் (மாணவன் யா/ பரி. யோவான் கல்லூரி), சனாக்கன், சனாக்கி ஆகியோரின் அன்புப்பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின்இறுதிக்கிரியைகள்அன்று மாலை 4. 00 மணி அளவில் சந்தை ஒழுங்கை, மானிப்பாய் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் மானிப்பாய் பிப்பிலி மயானத்தில் தகனம் செய்யப்பட்டது.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
க. விமலராஜா
(மருமகன்)

சந்தை ஒழுங்கை,
மானிப்பாய். (45345)

## திருமதி சின்னத்தம்பி சிதம்பரம்

சங்கத்தானையைச் சேர்ந்த திருமதி சின்னத்தம்பி சிதம்பரம் அவர்கள் 17 - 02 – 1997 அன்று காலமானார்.

இவர் காலஞ்சென்ற வல்லிபுரம் சின்னத்தம்பியின் அன்பு மனைவியும், பகவதி, பேரம்பலம், பரமசாமி, கனகசபை (தியாகு கடை), சகுந்தலா ஆகியோரின் அன்புத் தாயாரும் காலஞ்சென்ற சுப்பிரமணியம் (அதிபர்), கனகம்மா, நல்லம்மா, இந்திராதேவி, தில்லைநாதர் (நிர்வாக உத்தியோகத்தர், மாகாண சுகாதாரசேவைகள் பணிப்பாளர் அலுவலகம், திருமலை) ஆகியோரின் அன்பு மாமியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று செவ்வாய்க்கிழமை (18-02-1997) பி. ப. 2.00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் கண்ணாடிப்பிட்டி மயானத்தில் தகனம் செய்யப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

தகவல்;
சி. கனகசபை (தியாகு கடை)
(மகன்)

சங்கத்தானை,
சாவகச்சேரி. (45355)

## ஸ்ரீஸ்கந்தராசா ஸ்ரீதர்ஷன்

வேலணை மேற்கு சிற்பனையைப் பிறப்பிடமாகவும் கொழும்பு இராமநாதன் தொடர்மாடியை வதிவிடமாகவும், யாழ் இந்துக் கல்லூரியில் ஜீ. சி. ஈ. (உ/த) 1996 கணிதப் பிரிவில் கற்றுவந்தவருமான ஸ்ரீஸ்கந்தராசா ஸ்ரீதர்ஷன் 16 – 02 - 97 அன்று கொழும்பில் காலமாகிவிட்டார்.

இவர் காலஞ்சென்ற ஆசிரியர் ஸ்ரீஸ்கந்தராசா— மங்கயர்ஸ்வரியின் ஏகபுதல்வனும், சுபோதினி (யாழ் இந்து மகளிர் கல்லூரி A/L 97), ஜனதினி (யாழ். இந்து மகளிர் கல்லூரி A/L 99) ஆகியோரின் அன்புச் சகோதரனும், காலஞ்சென்ற காலி வர்த்தகர் தியாகராசா, சரஸ்வதி, காலஞ்சென்றவர்களான தம்பையா தம்பதியர்களின் பேரனும, பாலச்சந்திரன், பாலசூரியன், லோகநாதன் (கொழும்பு), ஸ்ரீதேவன் (கனடா) ஆகியோரின் பெறாமகனும், திரு. திருமதி ஈசன் சரசாம்பிகை, ஸ்ரீதரன் (லண்டன்), திருமதி ஸ்ரீதரன் திருமகள் (லண்டன்) ஆகியோரின் மருமகனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் கொழும்பில் நடைபெறும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
தி. பாலச்சந்திரன் (சந்திரா)
(சிறிய தந்தை)

இல. 50, இந்து மகளிர் ஒழுங்கை,
கந்தர்மடம்,
யாழ்ப்பாணம். (45348)

## இரத்தினபுரியில் பொலீஸார் இடமாற்றம்

கொழும்பு, பெப். 18

இரத்தினபுரி மாவட்டத்தில் கடமையாற்றும் பொலீஸார் வெளிமாவட்டங்களுக்கு இடமாற்றம் செய்யப்படுவார்கள் என்று அரசாங்கம் அறிவித்துள்ளது.

இவர்கள் தொகுதி தொகுதியாக இடமாற்றம் செய்யப்படவுள்ளனர் என்று இரத்தினபுரி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும், பிரதிக் கல்வி அமைச்சருமான டி. டபிள்யூ. ஜே. செனிவிரட்ன தெரிவித்தார்.

இரத்தினபுரி பகுதி மக்களுக்கும் பொலீஸாருக்கும் இடையே நிலவுகின்ற பதற்ற நிலையைத் தவிர்ப்பதற்கு வசதியாக இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்படுகிறது. நாலந்தா எல்லாவெல படுகொலை நிகழ்ந்த போது பொலீஸார் நடந்துகொண்ட விதம் பற்றி மக்களிடையே பலத்த எதிர்ப்புக் காணப்படுகிறது.

மறைந்த நாடாளுமன்ற உறுப்பினரின் இறுதிக் கிரியை நடந்த தினத்தன்று மக்களுக்கும் பொலீஸாருக்கும் இடையே பல இடங்களில் கைகலப்புகள் இடம் பெற்றன.

2 பொலீஸ் அத்தியட்சகர்கள் 9 சப் இன்ஸ்பெக்ரர்கள், 15 சார்ஜன்ட்கள் 23 பொலீஸ் கொன்ஸ்டபிள்கள் ஆகியோர் ஏற்கனவே இடமாற்றம் செய்யப்பட்டுள்ளதாகவும் பிரதி அமைச்சர்செனிவிரட்ண தெரிவித்தார். (இ-4-10)

## பங்கீட்டுக்கு 5 லீற்றர் மண்எண்ணெய்

யாழ்ப்பாணம் பலநோக்கக் கூட்டுறவுச்சங்கம் தற்போது மீண்டும் ஒரு குடும்பத்துக்கு 5 லீற்றர் வீதம் மண்எண்ணெய் வழங்கிவருகிறது.

சங்கக் கிளைகளில் இவ் விநியோகம் மேற்கொள்ளப்பட்டுவருகிறது. (இ-15)

## ஊர்காவலர் கொலை குறித்து விசாரிக்கக் குழு

கொழும்பு, பெப். 18

''கடந்த 9 ஆம் திகதி ரம்ழான் தினத்தன்று ஓட்டமாவடிப் பகுதியில் ஊர்காவலர் ஒருவர் கொலையுண்ட சம்பவம் தொடர்பாக உண்மையைக் கண்டறிவதற்காக விசேட குழு ஒன்றை நியமியுங்கள்.''

மட்டக்களப்பு மாவட்ட எம்.பியான அலி தாகீர் மௌலானா ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவை இவ்வாறு கோரியிருக்கின்றார். (உ-150)

## ப.நோ.கூ. சங்கக் கிளை

யாழ்ப்பாணம், பெப். 18

யாழ்ப்பாணம் பல நோக்குக் கூட்டுறவுச் சங்க, 12 ஏ இலக்க நல்லூர்க்கிளை நேற்று திறந்து வைக்கப்பட்டது.

கடந்த கால இராணுவ நடவடிக்கையின் பின் மீள இயங்கத் தொடங்கிய யாழ்ப்பாணம் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின இக்கிளை இதுவரை இயங்காது இருந்து வந்தது. (இ-15)

## தவறவிடப்பட்ட தங்க ஆபரணம்

செல்வச்சந்நிதி ஆலயத்தில் தங்க ஆபரணம் ஒன்று கண்டெடுக்கப்பட்டுள்ளது. தவறவிட்டவர்கள் தகுந்த ஆதாரம் காட்டி ஆலய நிர்வாகத் தலைவரிடம் பெற்றுக் கொள்ளவும்.

ஆலய நிர்வாகம்

(45356)

## பயிலுநர் தேவை

புளொக் தயாரிப்பில் பயிற்சி பெற விரும்பும் இளைஞர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. 22-02-97 க்கு முன் எழுத்து மூலம் விண்ணப்பிக்கவும்.

நிர்வாக உத்தியோகத்தர்,
அருண் புளொக் தயாரிப்பாளர்கள்
361, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

## நன்றி நவிலல்

### அமரர் யோ. யேசுதாசன்
(ஆசிரியர்)
(Tamil Trd.; Eng. Trd.; B. A. Dip. in Edu. S. L. P. S. Gr. II)

அன்னாரின் மரணச் செய்தி கேட்டு நேரில் வந்தும், தந்தி மூலமும், பத்திரிகை மூலமும் அனுதாபங்களைத் தெரிவித்தோருக்கு எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

தகவல்:
யோ. திருஞானம்
(ஆசிரியர்)

10, செபஸ்ரியார் வீதி,
யாழ்ப்பாணம். (45354)

# மரண அறிவித்தல்கள்

## கணபதிப்பிள்ளை பத்மநாதன்

இயக்கச்சியைப் பிறப்பிடமாகக் கொண்டவரும், பச்சிலைப்பள்ளி பளை நகர கிராமசேவையாளரும் பிரபல சமூகசேவையாளருமாகிய கணபதிப்பிள்ளை பத்மநாதன் 16. 2. 97இல் இறைபதம் அடைந்தார்.

அன்னார் திருமதி பரமேஸ்வரியின் (குடும்ப நலசேவையாளர், பளை) அன்புத் துணைவரும், காலஞ்சென்ற கணபதிப்பிள்ளை, சின்னத்தங்கம் ஆகியோரின் அன்பு மகனும், பாரதி, பாவலன், கோபி ஆகியோரின் அன்புத்தந்தையும், மருதங்கேணி திரு. திருமதி மார்க்கண்டு ஆகியோரின் அன்பு மருமகனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 17. 2. 97 திங்கட்கிழமை பளையில் அவரது இல்லத்தில் நடைபெற்றன. இவ்வறிவித்தலை உற்றார் உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
திருமதி ப. பரமேஸ்வரி
(குடும்பநலசேவையாளர்)

பளை நகரம்,
பளை. (…50)

## டாக்டர் அம்பலவாணர் தாமோதரம்பிள்ளை

காரைநகர் தங்கோடையைச் சேர்ந்த டாக்டர் அம்பலவாணர் தாமோதரம்பிள்ளை 16 – 02 - 1997 ஆம் திகதி லண்டனில் காலமானார்.

இவர் காலஞ்சென்ற அம்பலவாணர்-சிவகாமிப்பிள்ளை தம்பதிகளின் அன்பு மகனும், பாணந்துறை முன்னாள் பிரபல வர்த்தகர் காலஞ்சென்ற எஸ். கே. முருகேசு-மீனாட்சிப்பிள்ளை தம்பதிகளின் அன்பு மருமகனும், அன்னலட்சுமியின் அன்புக் கணவரும், லண்டனில் வசிக்கும் விக்னேஸ்வரன், ஜெயலட்சுமி, கங்காதரன், நித்தியலட்சுமி, ஜோதிலட்சுமி காலஞ்சென்ற யோகேஸ்வரன் ஆகியோரின் அன்புத் தந்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் லண்டனில் நடைபெறும்.

தகவல்:
எம். கே. பரமலிங்கம்
(மைத்துனர்),
(லிங்கம் றேடர்ஸ்)

ஆடியபாதம் வீதி,
திருநெல்வேலி வடக்கு,
யாழ்ப்பாணம். (45351)

## நாகநாதி இளையதம்பி
(முன்னாள் சிமெந்துக் கூட்டுத்தாபன ஊழியர்)
(அச்சுவேலி இளையதம்பி)

அச்சுவேலி பத்தமேனியைப் பிறப்பிடமாகவும் சுன்னாகம் பருத்திக் கலட்டியை வசிப்பிடமாகவும் கொண்ட நாகநாதி இளையதம்பி 10-2-97 இல் வவுனியாவில் காலமானார்

அன்னார் 31-10-96 வவுனியாவில் காலஞ்சென்ற செல்லம்மாவின் கணவரும், நதிலேஸ்வரி, சறோஜினிதேவி (கலா), மல்லிகாதேவி (மல்லி) சர்வானந்தன் (ஜேர்மனி), புஸ்பாதேவி (சுவிஸ்) காலஞ்சென்ற சச்சிதாசன் ஆகியோரின் அன்புத் தகப்பனாரும், பஞ்சாட்சரம் (யூனியன் கல்லூரி), சிவஞானம், சுப்பிரமணியம் (காந்தி) (பிரதேச செயலகம், உடுவில்), தயாகரன் (உதயன் பத்திரிகை முகவர், இணுவில்) (வெதுப்பக உரிமையாளர்), நற்குணம் (சுவிஸ்), விஜிதா (ஜேர்மனி) ஆகியோரின் மாமனாரும், மகேஸ்வரி, தம்பாப்பிள்ளை, தனபாக்கியம், பொன்னம்பலம் ஆகியோரின் சகோதரருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 11 - 02 - 97 இல் தோணிக்கல் வவுனியாவில் நடைபெற்றன.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
ச. சுப்பிரமணியம் (காந்தி)
(மருமகன்)

பருத்திக் கலட்டி,
சுன்னாகம். (சி/154)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பணயக் கைதிகளை மீட்க அதிரடித் தாக்குதல் திட்டம்!

## அமெரிக்கப் படை உதவியுடன்

லீமா, பெப்ரவரி 18

**பெரு நாட்டில் ஜப்பானியத் தூதரகத்தில் கடந்த இரு மாதங்களுக்கும் மேலாக இடது சாரிப் போராளிகளால் தடுத்து வைக்கப்பட்டிருக்கும் பணயக் கைதிகளை மீட்க கூட்டு இராணுவ நடவடிக்கை ஒன்றை மேற்கொள்ள பெரு நாட்டு அரசு தயாராகி வருவதாக அறிவிக்கப்படுகிறது.**

நீடித்து வரும் இந்தப் பணயக் கைதிகள் விவகாரத்துக்கு முடிவு கட்ட பெரு அரசாங்கம் அமெரிக்க இராணுவத்தின் விசேட கொமாண்டோ படை உதவியை நாடியிருப்பதாகச் செய்திகள் வெளியாகியுள்ளன,

பனாமாவில் உள்ள அமெரிக்கத் துருப்புகள் பெருவில் உள்ள ஜப்பானியத் தூதரகம் மீது திடீர்த் தாக்குதல் நடத்தி கைதிகளைப் பத்திரமாக மீட்கும் திட்டம் தொடர்பாக பெரு நாட்டு இராணுவத்தினருக்கு பயிற்சி அளித்து வருவதாகவும் —

போராளிகளுடான பேச்சுவார்த்தைகள் ஒரு புறம் நடந்து கொண்டிருக்க, தாக்குதல் திட்டத்தை தயாரிப்பதில் மறு புறம் மும்முரமாக அரசு ஈடுபட்டு வருவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

பணயக் கைதிகள் தடுத்து வைக்கப்பட்டிருக்கும் ஜப்பானியத் தூதரக இல்லம் மீது தாக்குதல் நடத்தப்பட்டால் அங்குள்ள 72 பணயக் கைதிகளில் 54 பேர் பலியாக நேரிடும் என்று புலனாய்வு அறிக்கைகள் தெரிவிக்கின்றன.

இடது சாரிப் போராளிகளிடமிருந்து ஜப்பானியத் தூதரகத்தை மீட்க ஏழு நிமிடத் தாக்குதல் போதுமானது என்று இராணுவ அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். (ஐ-10)

# புதிய அரசியல் கட்சி ஹெக்டே ஆரம்பித்தார்

கர்நாடக மாநிலத்தின் முன்னாள் முதலமைச்சரும், ஜனதா தள் கட்சியில் இருந்து நீக்கப்பட்ட தலைவருமான ராமகிருஷ்ண ஹெக்டே புதிய அரசியல் கட்சி ஒன்றை ஆரம்பித்துள்ளார்.

பெங்களூரில் நடந்த மாநாடு ஒன்றில் ''லோக்தள்'' என்ற தமது புதிய கட்சியை அவர் அறிவித்தார்.

நாட்டில் மூன்றாவது பெரிய கட்சியாக தமது இந்தக் கட்சி வளர்ந்துவிடும் என்று அவர் தெரிவித்துள்ளார்.

பிரதமர் தேவகௌடாவின் போட்டியாளரான ஹெக்டே தமது புதிய கட்சிக்கு ஆதரவு தேடுவதற்காக கர்நாடக மாநிலம் முழுவதிலும் நாட்டின் ஏனைய இடங்களிலும் நேரில் சென்று பிரசாரங்கள் செய்யப்போவதாக அறிவித்துள்ளார். (ஐ)

# நிர்க்கதி நிலையில் மியான்மர் அகதிகள்!

## தாய்லாந்து எல்லையில் தவிப்பு

ரங்கூன், பெப். 18

மியான்மர் இராணுவத்துக்கும் கரண் கிளர்ச்சியாளர்களுக்கும் இடையே மூண்டுள்ள சண்டையில் இருந்து தப்பிக்கொள்ள தாய்லாந்து நோக்கி வெளியேறிச் சென்று கொண்டிருக்கும் அகதிகளின் கதி குறித்து நிவாரணப் பணியாளர்கள் கவலை வெளியிட்டுள்ளனர்.

தாய்லாந்து எல்லையைக் கடக்கும் வழியில் இந்த அகதிகள் காடுகளுக்குள் அங்கும் இங்குமாக அநாதரவாக விடப்பட்டிருப்பதாகவும் —

குழந்தைகள், வயதான ஆண்கள், பெண்கள் எனப் பல்லாயிரக் கணக்கில் திரண்டுள்ள இந்த அகதிகள் அழுக்கான சூழலில் தொற்று நோய்களை எதிர்நோக்குவதாகவும் அறிவிக்கப்படுகிறது.

கரண் தேசிய யூனியனின் தளம் ஒன்றை மியான்மர் இராணுவம் கைப்பற்றியதை அடுத்து பல்லாயிரக் கணக்கான இந்த கரண் இன அகதிகள் தாய்லாந்து நோக்கிச் செல்கின்றனர். (ஐ)

# உலக அரங்கில்

## மண்டேலா அடைக்கப்பட்ட சிறைச்சாலை

தென்ஆபிரிக்காவிலுள்ள றொபின் தீவு சிறைச்சாலையை அமெரிக்கத் துணை அதிபர் ஆல்கோர் நேற்று முன்தினம் பார்வையிட்டார்.

தென் ஆபிரிக்க அதிபர் நெல்சன் மண்டேலா தனது 27 ஆண்டு கொடும் சிறைவாசத்தில் 18 ஆண்டுகளை இந்தச் சிறைச்சாலையிலேயே அனுபவித்தார்.

சிறைச்சாலையின் கொடுமையான அமைப்புகளைப் பார்த்து உணர்ச்சிவசப்பட்ட ஆல்கோர், மண்டேலா அனுபவித்த கொடுமைகளை எண்ணிப் பார்க்கவே முடியவில்லை; அவரது வாழ்க்கை தரும் பாடமானது நாட்டு எல்லையைக் கடந்து உலகமெங்கும் பரவி நிற்கிறது எனத் தெரிவுத்தார்.

# இரு இந்திய அதிகாரிகளை அமெரிக்கா வெளியேற்றியது!

வாஷிங்டன், பெப். 18

அமெரிக்காவில் உள்ள இந்திய ராஜீக பிரதிநிதிகள் இருவரை அந்நாட்டை விட்டு வெளியேறுமாறு அமெரிக்கா உத்தரவிட்டுள்ளது.

அமெரிக்காவில் உள்ள இந்தியத் துணைத் தூதரகங்களில் உதவி அதிகாரிகளாகப் பணியாற்றும் இந்த இரு அதிகாரிகளும் மூன்று வாரங்களுக்குள் அமெரிக்காவை விட்டு வெளியேறுமாறு உத்தரவிடப்பட்டுள்ளது.

கடந்த மாதம் இந்தியா இரு அமெரிக்க இராஜதந்திர அதிகாரிகளை புதுடில்லியில் இருந்து வெளியேற்றியதற்கு பதிலடியாக இந்த நடவடிக்கை அமைந்துள்ளதாக வஷிங்டனில் இருந்து கிடைக்கும் ஏஜென்ஸி செய்தி ஒன்று தெரிவிக்கின்றது.

புதுடில்லியில் இருந்து சி. ஐ. ஏ. உளவு நிறுவனத்தின் இந்திய தலைமை அதிகாரியும், மற்றொரு அதிகாரியும் இந்திய உளவுத்துறை அமைப்பின் மூத்த அதிகாரி ஒருவருடன் அரசின் முன் அனுமதியின்றி தொடர்பு வைத்துக் கொண்டதற்காக இந்தியாவைவிட்டு வெளியேறுமாறு அண்மையில் இந்திய அரசு உத்தரவிட்டிருந்தது.

## பொலீஸார் தலைமறைவு

புதுடில்லி, பெப். 18

குஜராத்தில் விசாரணையின் போது கைதிகள் சிலர் பார்வை இழந்துவிட்டது தொடர்பாகக் குற்றம் சுமத்தப்பட்டுள்ள பொலீஸார் 9 பேரும் தலைமறைவாகியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

சூதாட்டத்தில் ஈடுபட்டதாகக் கைதான இக் கைதிகளின் கண்களுக்குள் மிளகாய்த்தூள் கலந்த பொருளைப் போட்டு சித்திரவதை செய்யப்பட்டதாக குற்றச்சாட்டு சுமத்தப்பட்டுள்ளது.

## இத்தாலிய நிறுவனம் மறுப்பு

புதுடில்லி, பெப். 18

இந்திய அரசியலில் பெரும் சர்ச்சையை ஏற்படுத்திய ''போபர்ஸ்'' ஊழல் விவகாரத்தில் தமது நிறுவனத்துக்கு எந்தவித சம்பந்தமும் கிடையாது என்று இத்தாலிய பொறியியல் நிறுவனமான ''சினம்ரோ கெட்டிஸ்பா'' மறுப்புத் தெரிவித்துள்ளது.

தமது மறுப்பை தெரிவிக்கும் விளம்பரம் ஒன்றையும் அந்த நிறுவனம் ''ரைம்ஸ் ஒப் இந்தியா'' ஆங்கிலப் பத்திரிகையின் முன்பக்கத்தில் வெளியிட்டு இருக்கிறது.

## இந்திய அதிகாரிகள் இஸ்ரேலில்

டெல்அவிவ், பெப். 18

இஸ்ரேலிடமிருந்து இராணுவத் தளபாடங்களை வாங்குவதற்காக இந்திய இராணுவ அதிகாரிகள் அடங்கிய குழு ஒன்று இஸ்ரேல் வந்துள்ளதாக 'ஜெருசலேம் ஸ்போட்ஸ்' என்னும் ஆங்கிலப் பத்திரிகை தெரிவித்துள்ளது.

இந்தியப் பாதுகாப்புச் செயலர் தலைமையிலான குழு ஒன்று இஸ்ரேல் சென்றிருப்பதை உறுதிப்படுத்தியுள்ள இந்தியத் தூதரகம் மேலதிக விவரங்களை வெளியிட மறுத்துள்ளது.

## 4 ஆயிரம் பேரை காணவில்லை

சூடானின் தென்கிழக்குப் பகுதியில் கடந்த மாத3 புரட்சியாளர்கள் தாக்குதம் தொடங்கியதைத் அடுத்துல் ஆயிரம் முதல் நாலாயிரம் வரையான பொதுமக்கள் காணமற் போயுள்ளனர்.

அந்நாட்டின் மனிதாபிமானக் குழு ஒன்று இவ்வாறு குற்றஞ் சாட்டியுள்ளது.

ஏற்கனவே இத்தாக்குதல் காரணமாக 29 ஆயிரம் பேர் தங்கள் குடியிருப்புக்களை இழந்துள்ளனர். (இ-3)

## அசோக மித்திரனுக்கு சாகித்திய விருது

புதுடில்லி, பெப். 18

அசோக மித்திரன் எழுதிய ''அப்பாவின் சிநேகிதர்கள்'' என்ற சிறுகதைத் தொகுதி 1996 ஆம் ஆண்டுக்கான சாகித்திய அக்கடமி விருதைப் பெற்றுள்ளது.

சிறந்த மொழிபெயர்ப்புக்கான விருதை ''மங்கியதோர் நிலவினிலே'' என்ற பஞ்சாப் நாவலை தமிழில் மொழிபெயர்த்த தி. சா. ராஜு பெறுகிறார்.

இன்று செவ்வாய்க்கிழமை நடைபெறவுள்ள இந்த சாகித்திய விருது வழங்கும் வைபவத்தில் விருதுகளைப் பெறவுள்ள 21 இந்திய எழுத்தாளர்களில் பிரபல பொருளியல் நிபுணர் அசோக் மித்திரா, பிரபல ஆங்கில நாவல் ஆசிரியர்கள் சுனேந்திர குப்தா, நேபாலிமோகன் தாகூரி ஆகியோரும் அடங்குவர். (ஐ)

# தமிழ்-முஸ்லிம் உறவை பாதிக்காத விதத்தில் நடந்து கொள்ளுங்கள்

## ஹிஸ்புல்லா புலிகளிடம் கோரிக்கை

கொழும்பு, பெப். 18

தமிழ்—முஸ்லிம் மக்களின் உறவுகள் பாதிக்கப்படாத வகையில் புலிகளின் நடவடிக்கைகள் அமையவேண்டும்.

இத்தகைய கோரிக்கை ஒன்றை பிரதி அமைச்சரும், முஸ்லிம் காங்கிரஸ் பிரமுகருமான ஹிஸ்புல்லா, செஞ்சிலுவைச் சர்வதேசக் குழு மூலம் புலிகளுக்கு அனுப்பி வைத்திருக்கின்றாராம்.

ஊர்காவலரைக் கொல்வது விடுதலைப் புலிகளின் நோக்கமாக இருக்கலாம். ஆனால் அதனால் அப்பாவிப் பொதுமக்கள் இடையே குழப்பம், கலவரம் ஏற்படாமல் பார்த்துக் கொள்ள வேண்டியுள்ளது என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

ஓட்டமாவடி கலவரச் சம்பவங்களை அடுத்து, தமிழ்—முஸ்லிம் சமூகத்தவரிடையே பரஸ்பர நல்லுறவு ஏற்படுத்துவதற்கான நடவடிக்கைகள் குறித்து ஆராய்வதற்காக மட்டக்களப்பு அரச அதிபர் ஏ. கே. பத்மநாதன் தலைமையில் நடைபெற்ற கூட்டத்திலும் இதே போன்ற கருத்தை பிரதி அமைச்சர் ஹிஸ்புல்லா வலியுறுத்தினார். (உ-150)

# வன்னி மாணவருக்கு சீருடை அடுத்த வாரம் கிடைக்கும்

## வவுனியா கல்விப்பணிப்பாளர் முயற்சி

யாழ்ப்பாணம், பெப். 18

கிளிநொச்சி, முல்லைத்தீவு மற்றும் மன்னாரில் இராணுவக் கட்டுப்பாட்டில் இல்லாத பகுதி மாணவர்களுக்கான பாடசாலைச் சீருடைகளை அடுத்த வாரம் இப்பகுதிகளுக்கு அனுப்பி வைக்க நடவடிக்கை எடுக்கப்படுகிறது.

கொழும்பில் தேங்கிக்கிடந்த மேற்படி சீருடைகளை வவுனியா கல்விப்பணிப்பாளர் திரு. துரைதியாகராஜா கடந்த வாரம் வவுனியாவுக்கு எடுத்து வந்துள்ளார்.

தற்போது வவுனியாவில் வைக்கப்பட்டுள்ள இந்தச் சீருடைகளை சம்பந்தப்பட்ட பகுதிகளுக்கு அனுப்பிவைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. (ஐ-3)

# ஓட்டமாவடி வன்செயல்களின் பின்னணி குறித்து விசாரணை

## நடத்தக் கோருகிறார் ஐ.தே.க.எம்.பி.

மட்டக்களப்பு, பெப். 18

ஓட்டமாவடிச் சம்பவத்தின் பின்னணியில் சந்தேகத்துக்கிடமான சக்தி ஒன்று செயற்படுகிறது. அதைக் கண்டுபிடிக்க விசாரணை ஒன்றை நடத்த வேண்டும் என்று மட்டக்களப்புமாவட்ட ஐ.தே.க. எம்.பி அலிசாகிர்மௌலானா ஜனாதிபதியை கேட்டுள்ளார்.

ஜனாதிபதிக்கு அவர் அனுப்பியுள்ள கடிதம் ஒன்றிலேயே இக் கோரிக்கையை விடுத்துள்ளார்.

தமிழ் — முஸ்லிம் மக்கள் மத்தியில் விரிசலை ஏற்படுத்தும் நோக்குடன் இடம்பெறும் இச்சம்பவம் தொடர்பாக விசாரணை மேற்கொண்டு குற்றவாளிகளைக் இனங்கண்டு தண்டனை வழங்க வேண்டும் என்றும் அவர் கேட்டுள்ளார்.

## வேலணை ஆஸ்பத்திரியில் சிரமதானம்

வேலணை வைத்தியசாலை அண்மையில் சிரமதானம் மூலம் துப்புரவு செய்யப்பட்டது.

வேலணை ப. நோ. கூ. சங்கம், கடற்தொழிலாளர் சங்கம் தெங்கு பனம் பொருள் அபிவிருத்திக்கூட்டுறவுச் சங்கம், பிரஜைகள் குழு ஆகியனவற்றின் உறுப்பினர்களுடன் ஈ. பி.டி.பி உறுப்பினர்களும் இணைந்து இந்த சிரமதானத்தை மேற்கொண்டனர். (ஐ)

## தபால் பெட்டிகள் இல்லை

மாமுனை, குடாரப்பு பகுதிகளில் இருந்த தபால்பெட்டிகள் மாயமாக மறைந்து விட்டதால் தபால்களை அஞ்சலில் சேர்ப்பதில் இப்பகுதி வாழ் மக்கள் சிரமப்படவேண்டியுள்ளது. (ஐ-36)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "கெயர்" உதவியுடன் வலி. தெற்கில் விவசாயஊக்குவிப்புத் திட்டங்கள்

வலிகாமம் தெற்கு, பெப். 18

யாழ். குடாநாட்டின் விவசாய அபிவிருத்திக்கு உதவ 'கெயர்' ஸ்தாபனம் முன்வந்துள்ளது.

வலிகாமம் தெற்கு பிரதேச செயலர் பிரிவில் விவசாய அபிவிருத்தியின் பொருட்டு வீட்டுத் தோட்டம், பயிர்ச் செய்கை போன்றவற்றில் ஈடுபட்டுள்ள விவசாயிகளுக்கு கெயர் நிறுவனத்தினால் உதவிகள் வழங்க ஏற்பாடுகள் செய்யப்படுகின்றன.

இது சம்பந்தமாக பிரதேச செயலகத்தில் விவசாயிகளுடனான கலந்துரையாடல் ஒன்று நடைபெற்றுள்ளது.

இக்கலந்துரையாடலின் போது விவசாய உதவிகள் பெறத் தகுதியான விவசாயிகளைத் தெரிவு செய்யும் நடவடிக்கைகளும் இடம்பெற்றன.

தெரிவு செய்யப்படும் வீட்டுத் தோட்டச் செய்கையாளர்களுக்குத் தேவையான விதைகள், விவசாய உபகரணங்கள் போன்றவையும் — ஏனைய பயிர்ச்செய்கையாளர்களுக்கு விதைகளும் இலவசமாக வழங்கப்பட உள்ளன.

இப்பிரதேச செயலர் பிரிவில் உள்ள 15 கிராம சேவையாளர் பிரிவுகளிலும் இத்திட்டத்தினை அமுல்படுத்த பிரதேசச் செயலகம் நடவடிக்கை எடுத்துள்ளது.

(ஐ-152)


## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்

தோற்றம்: — 02 — 1913



மறைவு: 20 — 01 — 1997

அமரர்

### நாகமுத்து இரத்தினசாமி

(அச்சுவேலி, பத்தமேனி)

அன்பு, அடக்கம், கல்வியறிவு சகிப்புத்தன்மை, இரக்கம் இவையாவற்றுக்கும் இலக்கணமாக வாழ்ந்து பாசத்தின் பிணைப்பால் எம்மை உருவாக்கி கண்ணை இமை காப்பதிலும் மேலாகக் காத்து பிள்ளைகள் யாம் வாழ பெரும்பாடு பட்டீர். நாம் வாழும் நேரத்தில் எம் கண்களை ஈரமாக்கி கண்மூடிச் சென்றீரோ! முப்பத்தொரு நாள் ஓடி மறைந்திடினும் உங்கள் நினைவு எம்மை விட்டு நீங்காது.

அன்னாரின் ஆத்மசாந்திக் கிரியை நாளை (19-2-97) புதன்கிழமை காலை 10 மணிக்கு ஆரம்பமாகும். உற்றார், உறவினர், நண்பர்கள் யாவரும் ஆத்மசாந்தியின் பொருட்டு பிரார்த்திப்பதுடன் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் வேண்டுகின்றோம்.

மனைவி, மக்கள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

துளசி வர்த்தக நிலையம்,
இருபாலைச் சந்தி,
கோப்பாய்.

(சி/ 146)


## கௌரவிப்பு

நல்லூர் லயன்ஸ் கழகத்தின் மூத்த உறுப்பினர் லயன் வி. பரமசிவத்தின் சேவையைப்பாராட்டிகௌரவிக்கும் நிகழ்வு கழகத்தின் தலைவர் லயன் தி. தங்கேஸ்வரன் தலைமையில் கடந்த ஞாயிறன்று நடைபெற்றது.

1992 – 1993 ஆம் ஆண்டில் லயன் பரமசிவம் நல்லூர் லயன்ஸ் கழகத் தலைவராக இருந்த போது சிறந்த சேவைக்கான நூறு வீத பெறுபேறு விருதை நல்லூர் லயன்ஸ் கழகம் பெற்றுக் கொண்டமை குறிப்பிடத்தக்கது.

தமது சேவையை யாழ்ப்பாணத்தில் முடித்துக் கொண்டு வெளிநாடு செல்லும் அவர், கடந்த ஞாயிற்றுக் கிழமை நடந்த நிகழ்ச்சியில் தங்கப்பதக்கம் அணிவிக்கப்பட்டு கௌரவிக்கப்பட்டார்.

இந்த நிகழ்ச்சியின் போது கழகத்தின் புதிய அங்கத்தவர்கள் ஐவரை அவர் கழக உறுப்பினர்களாக நிலைப்படுத்தினார்.

வேறு பன்னிருவருக்கு மூக்குக் கண்ணாடிகள் வழங்கப்பட்டன. (உ)

## பஸ் சேவை

யாழ். நகரில் இருந்து கொழும்புத்துறை வரையான பஸ் சேவைஒன்றைவடபிராந்திய போக்கு வரத்துச்சபை ஆரம்பித்துள்ளது.

சுண்டுக்குளி சந்தி, ஈச்சமோட்டை வீதி, புங்கன்குளம் வீதி, கொழும்புத்துறைவீதி ஊடாக கொழும்புத்துறை துறைமுகச்சந்திவரை தினமும் மூன்று வேளை சேவைகள் நடைபெறுகின்றன. (ஐ-30)

# பிரதிப் பதிவாளர் நாயகத்தின் அலுவலகத்தைத் திறவுங்கள்!

## மக்கள் குழு கோரிக்கை

யாழ்ப்பாணத்தில் முன்னர் இயங்கிய பிரதிப் பதிவாளர் நாயகத்தின் அலுவலகத்தை மீண்டும் ஆரம்பிக்க நடவடிக்கை எடுக்குமாறு கோரிக்கை விடுக்கப்பட்டிருக்கிறது.

— யாழ். சமாதானத்துக்கும், நல்லெண்ணத்துக்குமான மக்கள் குழு இது தொடர்பாக பொது நிர்வாக உள்நாட்டலுவல்கள் அமைச்சருக்கு கடிதம் ஒன்றை அனுப்பியுள்ளது.

பிந்திய இறப்பு, பிறப்பு பதிவுகள், பெயர் மாற்றம், சட்டவலு )Power of Attorney) வழங்குதல் போன்ற சேவைகளை இந்த அலுவலகம் இயங்கிய காலத்தில் மக்கள் சுலபமாகப் பெற்றுக் கொள்ள முடிந்தது.

இந்த அலுவலகந்தில் முன்னர் பணியாற்றிய பிரதிப் பதிவாளர் நாயகம் ஒய்வு பெற்றதை அடுத்து அலுவலகமும் மூடப்பட்டுவிட்டது.

இந்த அலுவலகம் மூலம் பெற்றுக் கொள்ளக் கூடியதாக இருந்த வசதிகளை இப்போது கொழும்பில் இருந்தே பெற வேண்டியுள்ளது.

இந்த அலுவலகத்தைமீளத் திறக்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். அல்லது இந்தப் பணிகளை மேற்கொள்ளும் அதிகாரத்தை பிரதேச செயலருக்குவழங்கவேண்டும்.

— இவ்வாறு அந்தக் கடிதத்தில் கோரிக்கை விடுக்கப்பட்டிருக்கிறது.

இக் கடிதத்தின் பிரதிகள் பதிவாளர் நாயகத்துக்கும். யாழ். அரச அதிபருக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. (ஐ-3)

# கால்நடைகளை சட்டவிரோதமாக வெட்டுவது குறித்து எச்சரிக்கை

## முன் அனுமதி பெறவேண்டும்

யாழ்ப்பாணம், பெப். 18

யாழ். மாநகர சபைப்பகுதியில் சட்டவிரோதமாக கால்நடைகளை வெட்டி விற்பனை செய்வது தொடர்பாக சகல இறைச்சிக்கடைஉரிமையாளர்களும் எச்சரிக்கை செய்யப்பட்டு அவர்களுக்குஅறிவுறுத்தல்களும் வழங்கப்பட்டுள்ளன.

— யாழ். மாநகர சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் இ தெய்வேந்திரன் இவ்வாறு அறிவித்திருக்கிறார்.

பொதுமக்கள்தமது கொண்டாட்டங்கள், வைபங்களுக்கு கால்நடைகளை வெட்ட வேண்டிய தேவை ஏற்படும் சந்தர்ப்பங்களில் —குறைந்த பட்சம் மூன்று நாள்களுக்கு முன்னரே — அதற்கான அனுமதியைப் பெற்றுக் கொள்ளுதல் அவசியம் என்றும் அவர் வலியுறுத்திக்கூறியுள்ளார்.

அனுமதி பெறுவதற்கான விண்ணப்பத்தை யாழ். மாநகர சுகாதாரப்பகுதி உணவுப் பரிசோதகரிடம் சமர்ப்பித்து உரிய அனுமதியைப்பெற்றுக் கொள்ளுமாறும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(ஐ)

## மெய்வல்லுநர் போட்டி

சண்டிலிப்பாய், பெப். 18

வட்டுக்கோட்டை இந்துக் கல்லூரியின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி இன்று செவ்வாய்க் கிழமை முற்பகல் பதில் அதிபர் திரு. ச. இராமலிங்கம் தலைமையில் நடைபெறவுள்ளது.

பிரதம அதிதியாக வலி. மேற்கு பிரதேச செயலர் திரு.கா. சந்திரராசா கலந்து கொள்வார். சிறப்பு விருந்தினராக சங்கானை கல்விக் கோட்ட உதவிக் கல்விப் பணிப்பாளர் திரு. அ. தற்பரானந்தர் கலந்து கொள்வார்.

(ஐ-125)


யாழ்ப்பாணப் பல்கலைக் கழகம்

விவசாய பீடம்

## அறிவித்தல்

கிளிநொச்சியில் அமைந்திருந்த யாழ்ப்பாணப் பல்கலைக்கழக விவசாயபீடம் தற்போது முல்லைத்தீவு மாவட்டத்தில் கருப்பட்டி முறிப்பு என்னும் இடத்தில் இயங்க ஆரம்பித்துள்ளது. எனவே மேற்படி விவசாய பீடத்தில் பணியாற்றும் அனைத்து கல்வி சார்ந்த, கல்வி சாராத உத்தியோகத்தர்களும் உடனடியாக கருப்பட்டி முறிப்பில் இயங்கும் யாழ்ப்பாணப்பல்கலைக்கழக விவசாய பீடத்தில் கடமைக்காக சமுகமளிக்கும்படி கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

பதிவாளர்
யாழ்ப்பாணப்
பல்கலைக்கழகம்,
திருநெல்வேலி.
1997 – 02 – 14

(சி/150)



உ

விராட் விஸ்வப் பிரம்மனே நமஹ

## பூப்புனித நன்னீராட்டு விழா அழைப்பு



அன்புடையீர்!

நிகழும் மங்களகரமான தாது வருடம் மாசித் திங்கள் 8 ஆம் நாள் (19 - 02 - 1997) புதன்கிழமை பகல் 11-30 மணி முதல் 12-28 மணி வரையுள்ள புநர் பூச நட்சத்திரமும், சித்த யோகமும், இடப லக்கினமும் கூடிய சுப வேளையில்

காலஞ்சென்ற மூ. குற்றாலலிங்கம்
(உப அஞ்சலதிபர் - யாழ்ப்பாணம், வண்ணார்பண்ணை)
இராஜமலர் தம்பதிகளின்
ஏக புத்திரி

★ செல்வி ஜயப்பிரீதா ★

அவர்களுக்கு பூப்புனித நன்னீராட்டிருது சாந்தி செய்யப் பெரியோர்கள் நிச்சயித்திருப்பதால் அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து சிறப்பித்து செல்வியை ஆசீர்வதிக்கும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.



இங்ஙனம்
தங்கள் நல்வரவை விரும்பும்:
திருமதி இ. குற்றாலலிங்கம், திருமதி ம. முருகேசு குடும்பத்தினர்,
திருமதி ச. சதாசிவம், குடும்பத்தினர்.
([illegible] - யாழ்ப்பாணம்)
([illegible] டுத்தாபனம்).

''ராஜபவனம்''
514 (206) கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

(45278)


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## கண்ணீர் அஞ்சலி

எமது சக மாணவன்

### செல்வன் ஸ்ரீஸ்கந்தராசா தர்ஷன்

அவர்களின் மறைவினால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திக்கின்றோம்.

**"96" ஆம் ஆண்டு கணிதப் பிரிவு மாணவர்கள்.**

**யாழ். இந்துக்கல்லூரி**
**யாழ்ப்பாணம்.**

(9292)

## கண்ணீர் அஞ்சலி

பளை நகர கிராமசேவையாளரும்,
பளை செஞ்சிலுவைச்சங்க தலைவரும்
சமூகத்தொண்டனுமான

### கணபதிப்பிள்ளை பத்மநாதன்

அவர்களின் திடீர் மறைவையொட்டி எமது கண்ணீர் அஞ்சலியை தெரிவிப்பதுடன், அவரது பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களையும தெரிவித்துக் கொள்கின்றோம்.

**பளை வர்த்தக சங்கம்**
**பளை.**

(9294)

## கண்ணீர் அஞ்சலி

எமது உயிர் நண்பன்

### ஸ்ரீஸ்கந்தராசா ஸ்ரீதர்சன் (தர்சன்)

அவர்களின் மறைவையொட்டி துயருறும் அன்னாரின் குடும்பத்தினருக்கும், அவரின் உறவினர்களுக்கும் எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அவரது ஆத்மா சாந்தியடையவும் இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

(45341) **நண்பர்கள்.**

## கண்ணீர் அஞ்சலி

எமது சக உத்தியோகத்தர்
**திரு.க. சந்திரசேகரம்பிள்ளை**
அவர்களின் அன்புச் சகோதரர்

### அமரர் க. அருண்மொழித்தேவன்

அவர்களின் மறைவினால் துயருற்றிருக்கும் அவருக்கும் அவரது குடும்பத்தினருக்கும் எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

**- பிரதிக் கல்விப்பணிப்பாளரும்**
**சக உத்தியோகத்தர்களும்.**

**அலகு I கோட்டக்கல்வி**
**அலுவலகம்,**
**யாழ்ப்பாணம்.**

(45346)

## 4ஆம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு: 15 — 07 — 1914



உதிர்வு: 18 — 02 — 1993

### திருமதி மாணிக்கம் சரவணமுத்து

பாசத்தின் உறைவிடமே பண்பு நிறை பேருருவே!
மாசற்ற மனத்தோடு மங்களமாய் வாழ்ந்து
பேர்பெற்ற பெருவாழ்வை எமக்காய் அளித்து
நாம் வாழும் நேரத்தில் சோர்வுற்று — நாம்
தவிக்க எம்மை விட்டு பிரிந்ததுவும் — ஏன்
அம்மா! ஆண்டு நாலென்ன நானூறு ஆனாலும்
ஆறுமோ எம் துயரம்-

உங்கள் பிரிவால் துயருறும்:
**மகன், மருமகன், பேரப்பிள்ளைகள்.**

45, சங்கிலியன் வீதி,
நல்லூர்,
யாழ்ப்பாணம்.

(சி/ 148)

## சமய சந்நிதிகளில்

சுழிபுரம் மேற்கு பெரிய தம்பிரான் கதிர்வேலாயுத சுவாமி கோயில் அலங்காரத் திருவிழா கடந்த வியாழனன்று ஆரம்பமானது. எதிர்வரும் மாசிமகத்தன்று தேர்த் திருவிழா இடம்பெறும்.

(ஐ-28)

★ ★ ★

திருநெல்வேலி ஸ்ரீ சத்திய சாயி சேவா சமித்தி மண்டபத்தில் எதிர்வரும் 22 ஆம் திகதி சனிக்கிழமை காலை 10.30 மணிமுதல் நண்பகல் 12.00 மணிவரை காயத்ரீ மந்திரம், திருப்பாசுரம் திவ்வியப் பிரபந்த — பாராயணம் இடம்பெறும்.

பண்ணிசைப்புலவர்வேலுப்பிள்ளை சிவஞானம் இதனை வழங்குவார்.

★ ★ ★

கொழும்புத்துறை ஆத்தியம்பதி ஸ்ரீ சந்திரசேகரர் விநாயக ஆலய வருடாந்த உற்சவத்தின் கைலாச வாகனத் திருவிழா நாளை புதன் கிழமை மாலை நடைபெறுகிறது. (ஐ-30)

## விவேகானந்தர் படத்துடன் நாள்காட்டி

நவாலி, பெப். 18

சுவாமி விவேகானந்தரின் யாழ். விஜயத்தின் நூற்றாண்டு விழாவை ஒட்டி கல்வயல் இந்து இளைஞர் மன்றம் விவேகானந்தரின் உருவப்படம் பதிக்கப்பட்ட நாள்காட்டிகளை இலவசமாக விநியோகித்து வருகிறது. (ஐ-100)

## கட்டுப்பாடின்றி சிமெந்து விநியோகம்

தென்மராட்சி, பெப். 18

தென்மராட்சிப் பிரதேசத்தில் உள்ள சாவகச்சேரி, கைதடி, கொடிகாமம் ஆகிய பலநோக்குக் கூட்டுறவுச் சங்கக் கிளைகளில் கட்டுப்பாடின்றி சிமெந்துப் பக்கற்றுக்களை பெற்றுக் கொள்ளலாம் என்று பிரதேச செயலகம் தெரிவித்துள்ளது.

இதுவரை சிமெந்து வழங்குவதற்கு நடைமுறையிலிருந்த அனுமதிப் பத்திரம் வழங்கும் முறை நிறுத்தப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது.

(ஐ-117)

## தவக்கால நற்சிந்தனை

**7 ஆம் நாள் - செவ்வாய்**

இயேசு பாலைவனத்தில் சாத்தானால் 40 நாள்கள் சோதிக்கப்பட்டு இருந்தார். சோதனைகள் வரும் போது எமக்கு மட்டும் தான், எனத் துவண்டு விடாதீர்கள். இறைவன் எதிர் கொண்டு சாத்தானை வென்றது போல எத்துயரையும் இறை நம்பிக்கையில் எதிர் கொள்ளுங்கள்.

அவர் முதல் போதனையில் கூறியதாவது: ''காலம் நிறைவேறிவிட்டது, கடவுள் அரசு நெருங்கிவிட்டது மனம் திரும்பி இந்நற் செய்தியை நம்புங்கள்'' என்பதாவது. இந்தவார்த்தையில் இன்னும் ஆழமாகச் சிந்தித்துப் பாருங்கள்.

இன்றைய உலகப் போக்கில் எம்மால் முடியாது எனத் துவளும் மக்களுக்கு உள்ள கடமைகள் பொறுப்புக்களை விளக்க நற்செய்தியை ஆழமாக அறியவும், அறிவிக்கப்படவும் அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது. சாத்தான்கள் பல வேஷங்களில் உங்களை அணுக வருவதை அறிவீர்கள். [illegible] மனம்திரும்ப வேண்டிய காலமும் இதுவே.

**யோசப் பாலா**

## முதல் நாள் மீனை மறு நாளும் விற்பனை செய்யும் நடைமுறை

### பாவனையாளர் முறைப்பாடு

சாவகச்சேரி, பெப். 18

முதல் நாள் சந்தையில் எஞ்சிய மீன் வகைகள் மறு நாளும் பாவனையாளர்களுக்கு விற்பனை செய்யப்படுவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

சாவகச்சேரி சந்தையில் சில மீன் வியாபாரிகள் சமீப நாள்களாக இவ்வாறு நடந்துகொள்வதாகப் பாவனையாளர்கள் சிலர் சுட்டிக்காட்டியிருக்கின்றனர்.

சுறா, திருக்கை போன்ற மீன் வகைகளை நீரில் நனைக்கப்பட்ட சாக்குகளில் இட்டு சந்தைப் பகுதியில் உள்ள அறைகளில் வைத்துவிட்டு பின்னர் மறுநாள் நேரகாலத்துடனேயே — புதிய மீன் வகைகள் சந்தைக்கு வருவதற்கு முன்னரே — பொது மக்களுக்கு அவற்றை வெட்டி விற்பனை செய்து விடுவதில் சில வியாபாரிகள் ஈடுபடுவதாகச் சொல்லப்படுகிறது.

(ஐ-31)

## வாசகர் திருமுகம்

## பெற்றோலியம் கூட்டுத்தாபன அதிகாரிகளின் கவனத்துக்கு...

இம்மாதம் 4 ஆம் திகதி எனது மோட்டார் சைக்கிளுக்கு மண்எண்ணெய் நிரப்புவதற்காக யாழ்ப்பாண நகருக்கு வெளியே அதனை அண்டிய பகுதியில் உள்ள பெற்றோலிய கூட்டுத்தாபன முகவர் நிலையமொன்றிற்குச் சென்றேன். ''மோட்டார் சைக்கிளுக்கு வரிகட்டிய றிசீற் இருக்கின்றதா?'' என்று அங்கிருந்த ஓர் இளைஞர் கேட்டபொழுது, அதைக் கொண்டு வர வேண்டுமென்று தெரியாததால் கொண்டு வரவில்லை என்று நான் சொன்னேன்.

''பாவம், இரண்டு லீற்றர் நிரப்பிவிடு'' என்று அவ்விளைஞர் அங்கு நின்ற வாட்டசாட்டமான வேறொரு இளைஞருக்கு உத்தரவிட்டார். இரண்டாவது இளைஞர் வந்து மண்எண்ணெய் பம்பியின் குழாயை கையில் எடுத்துக் கொண்டு ''சுற்றும்'' என்று எனக்கு உத்தரவிட்டார். ''தம்பி நான் இருதய வருத்தக் காரன் என்னால் சுற்ற முடியாது'' என்று நான் கூறிய போது — மண்எண்ணெய் வழங்க உத்தரவிட்ட முதலாவது இளைஞர் உடன் வந்து ''ஆமியின் ஓடர்: மண்எண்ணெய் எடுக்க வருபவர்கள் தான் சுற்றவேண்டும்; முடியாவிட்டால் முன்னுள்ள தனியார் கடையில் வாங்கவும் எங்களை குழப்ப வேண்டாம்'' என்று கூறிவிட்டு, கொள்கலன் ஒன்றுடன் வந்து நின்ற அவரது நண்பர் ஒருவருக்கு 20 லீற்றர் மண்எண்ணெய் வழங்கினார். அப்போது தான் அவர் தனது வியாபாரத்தை ''குழப்ப வேண்டாம்'' என்று சொன்னதின் அர்த்தம் புரிந்தது.

யாழ் நகரிலுள்ள மாக்பெட், வி. கே. எஸ். முதலிய எரிபொருள் நிலையங்களில் எதுவித விசாரணைகளுமின்றி வாகனங்களுக்கு அங்கு பணிபுரிபவர்களே எரிபொருள்களை நிரப்பிவிடும்பொழுது, மேற்குறித்த முகவர் நிலையத்துக்கு மட்டும் இராணுவம் ஏன் 'ஓடர்' செய்துள்ளது என்று எனக்கு விளங்கவில்லை!

இராணுவத்தின் மேல் பழியைப் போட்டுவிட்டு தப்பித்துக்கொள்ளும் சில சுயநலவாதிகள் மீது அரச அதிகாரிகள் நடவடிக்கை எடுப்பார்களா?

**நா. பரஞ்சோதி**

நல்லூர் வடக்கு.

## விபத்துகளுக்கு வித்திடலாமா?

தினமும் பத்திரிகையிலோ அன்றி மக்களின் வாயிலோ விபத்துகளைப் பற்றி செய்திகளையே அறிகிறோம்; கேட்கிறோம் விபத்துக்களைத் தடுப்பதை விடுத்து நாமே விபத்துகளுக்கு வித்திடலாமா?

பருத்தித்துறை துறைமுகப் பகுதிக்கு பொருள்கள் ஏற்ற வரும் லொறிகள் முன்பு பருத்தித்துறை பழைய சந்தைப் (பஸ்தரிப்பு நிலையத்தில்) பகுதியிலேயே நிறுத்தப்பட்டன. ஆனால் காரணம் எதுவோ தெரியாது, சமீப நாள்களாக சிறுவர் பூங்காவாக இருந்து இராணுவத்தால் நொருக்கப்பட்ட இடத்தில் லொறிகள் விடப்படுகின்றன. விபத்துகளுக்குப் பெயர் போனது ஓராம் கட்டைப் பகுதி. சென்ற வருட இறுதியிலும் மாணவன் ஒருவன் கடைக்குச் சென்ற சமயம் லொறியில் மோதுண்டு இறந்தது பலருக்கும் நினைவில் இருக்கலாம்.

சிறு குழந்தைகளும் படிக்கும் பாடசாலையான வட இந்து மகளிர் கல்லூரியும், பிரபலமான நான்கு 'ரியூட்டரி' களும் ஓராம்கட்டையில் மேலும் அமைந்துள்ளன. மெதடிஸ்த பெண்கள் உயர்தர பாடசாலை, ஹாட்லி, வேலாயுதம் மகா வித்தியாலயம் போன்றவற்றுக்குச் செல்லும் மாணவர்களும், சந்தைக்கும் வேலைக்கும் செல்வோருமாக பொதுமக்களும் மிகுந்த நெருக்கடிமிக்க பகுதி இது.

இப்போது லொறிகளை வீதியின் ஓரத்தில் நிறுத்துவதாலும், நிறுத்தியிருக்கும் இடத்திலிருந்து 'ரிவர்சில்' எடுப்பதன் மூலமும் பொதுமக்களுக்கும் பாதசாரிகளுக்கும் பல சிரமங்கள் உண்டாகின்றன.

மக்களின் இச்சிரமங்கள் குறித்து பிரதேச செயலரோ வேறு பொறுப்பான அதிகாரிஎவருமோ நடவடிக்கை எடுக்கவில்லை. தயவுசெய்து உடனடியாக தக்க நடவடிக்கை எடுத்து விபத்துக் களையும் உயிரிழப்புக்களையும் தவிர்க்க உதவிடுங்கள் என்று கேட்டுக்கொள்கின்றோம் இது தனிப்பட்டவர்களின் கோரிக்கை மட்டுமல்ல பல மாணமாணவியரின் விருப்பமும் இதுவே.

**பா. லோகநாயகி**
**பா. தர்சினி**

பருத்தித்துறை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சின்னஞ்சிறு விளம்பரம்

### காணி விற்பனைக்கு

அல்லாரை அறுகம்புலப் பிள்ளையார் கோயில் வீதியில் கிணறும் தொட்டியும் தென்னை மரங்களும் கூடிய நல்ல சூழலில் அமைந்த பத்துப் பரப்புக் காணி விற்பனைக்குண்டு. (தோட்டம் செய்வதற்கோ, வீடு கட்டுவதற்கோ உகந்தது)தொடர்பு: நேசம் அழகுநகை, பிரதான வீதி சாவகச்சேரி, (சி-131)

### தவறிவிட்டது

15-02-97 ஞாயிறு காலை புனித திரேசம்மாள் ஆலயத்தில் இருந்து வீடு வரையுள்ள வீதியில் எனது கைச்செயின் விழுந்து விட்டது. கண்டெடுத்தவர்கள் சிற்றி மோட்டர்ஸ், ஏழாலை மேற்கு, சுன்னாகம் அல்லது ஆலயத்தின் அருகிலிருக்கும் அருமைநாயகம் மாஸ்ரர், சூராவத்தை என்பவரின் விலாசத்தில் ஒப்படைக்கவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும், (45333)

### வீடு வாடகைக்கு

அத்தியடியில் தளபாடங்களுடன் கூடிய விசாலமான வீடு, இந்துசமய சிறிய குடும்பத்தவர்களுக்கு கொடுக்கப்படும். தொடர்பு: செ. குணசிங்கம், 31, கோயில் வீதி, யாழ்ப்பாணம்.

(45342)

## பிறீமா கோழிக்குஞ்சு

ஒரு நாள் நிரம்பிய பிறீமா லோமன் இன பேட்டுக் கோழிக்குஞ்சு (சிவப்பு, வெள்ளை) விற்பனைக்குண்டு. மருந்தும் வழங்கப்படும். முகவரி:

**R. S. K. கோழிப்பண்ணை,**
**"முருகபதி", உடுவில்,**
**சுன்னாகம். (உடுவில் மான்ஸ் பாடசாலை வீதி)**

(45330)

## யாழ்ப்பாண மாநகரசபை
## பொது அறிவித்தல்

யாழ்ப்பாண மாநகரசபைக்குச் சொந்தமான நவீனசந்தைக் கடைகளை கேள்வி அடிப்படையில் வாடகை உரிமையாகப் பெற்றுக்கொண்டவர்கள் தமது தற்போதைய வதிவிட முகவரியை எதிர்வரும் 15 – 03 - 97 ஆம் திகதிக்கு முன்னர் பதிவுத்தபாலில் 'மாநகர ஆணையாளர், யாழ்ப்பாணம்' என்ற முகவரிக்கு அனுப்பிவைத்து தங்களது வாடகைக் குத்தகை உரிமையை ஒழுங்குபடுத்தும் நடவடிக்கைக்கு ஒத்துழைப்பு வழங்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

அறிவிக்கத் தவறுமிடத்து வாடகைக் குத்தகை உரிமையை தாங்களாகவே விலக்கிக் கொண்டவர்களாகக் கருதப்படுவர் என்பதை அறியத்தருகின்றேன்.

**மாநகர ஆணையாளர்,**
யாழ்ப்பாணம்.

மாநகர அலுவலகம்,
யாழ்ப்பாணம். 1997 - 02 - 11

(சி/149)

## நன்றி நவிலல்

அமரர்
### அந்தோனிப்பிள்ளை மரியதாசன்
**(இளைப்பாறிய ஆசிரியர், யா/இந்துக்கல்லூரி)**

அவர்களின் மறைவையொட்டி எம்மில்லம் வந்து அனுதாபம் தெரிவித்த குரவர்கள், கன்னியர்கள். பாடசாலைகளின் அதிபர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள், பழைய மாணவர்கள் அனைவருக்கும், செப வழிபாடுகள் நடத்தியவர்களுக்கும் மலர் வளையங்கள் சாத்தியும் அஞ்சலிப் பிரசுரங்கள் மூலம் அனுதாபம் தெரிவித்தோருக்கும், இரங்கற் திருப்பலியும் ஏனைய சடங்குகளும் சிறப்பாக நடந்தேற உதவிய அருட் தந்தையர்களுக்கும் பீடப்பணியாளர்களுக்கும், பாடகர்குழாம், இளைஞர்களுக்கும் மற்றும் ஆலயபணியாளருக்கும் இறுதி ஊர்வலம் சிறப்பாக நடைபெற உதவியோருக்கும் இறுதிக் கிரியைகளில் பங்கேற்ற அன்பர்கள், நண்பர்கள், உறவினர்கள் அனைவருக்கும் எமது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

குடும்பத்தினர்.

''மங்கள இல்லம்''
நாவலி தெற்கு, மானிப்பாய். (45339)

## 31ஆம் நாள் நினைவஞ்சலி

### திருமதி அழகம்மா வில்லவராஜா
(ஓய்வு பெற்ற ஆசிரியை, மானிப்பாய்)

திருமதி அழகம்மா வில்லவராஜா 19-01-1997இல் காலமானார், அன்னாரின் நல்லடக்க ஆராதனை 20 - 01 – 97இல் அவரது இல்லத்தில் நடைபெற்று மானிப்பாய் பிப்பிலி சேமக்காலையில் பூதவுடல் நல்லடக்கம் செய்யப்பட்டது.

அன்னார் காலஞ்சென்ற திரு. சு. வில்லவராஜாவின் அன்பு மனைவியும், மேர்சி புனிதகுணமலர், அல்பிறட் சாந்திக்குமார், சாமுவேல் தேவறூபன் ஆகியோரின் அருமைத் தாயாரும், தேவவசீகரன், டெய்சிபத்மினி, ஜானகி ஆகியோரின் அன்பு மாமியாரும் ஆவார்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்களுக்கு அறியத்தருவதுடன் 18-02-97 இன்று அன்னாரின் இல்லத்தில் நடைபெறும் 31ஆம் நாள் ஆராதனையில் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

தகவல்:
**பிள்ளைகள்.**

லைமன் ஒழுங்கை,
லோட்டன் வீதி, மானிப்பாய். (9281)

## சொல்லில் அடங்காத சோகமிகு
## 2 ஆம் ஆண்டு நினைவஞ்சலி





செல்வன்
### சற்குணமூர்த்தி மணிவதனன்
(முன்னாள் யாழ். மத்திய கல்லூரி உயர்தர விஞ்ஞான பீட மாணவன் 94 ஆம் ஆண்டு, கிரிக்கெட் அணித்தலைவன்)

செல்வி
### சற்குணமூர்த்தி ஜெயச்சித்ரா

| தோற்றம்: | மறைவு: | தோற்றம்: | மறைவு: |
|---|---|---|---|
| 23–10–1975 | 18–02–1995 | 23–04–1977 | 01–04–1995 |

''தங்கை உயிரை எண்ணி தன்னுயிரை
வைத்திருந்தான் அண்ணன் வளர்த்த உயிர் அவனுடனே சென்றதம்மா''

உன் பிறப்பால் பெருமை கொண்ட பெற்றோரும் சோதரரும் உன் இறப்பால் இரண்டாண்டு பெரும் தணலில் புழுவானார் தாய்க்குத் தலைமகனாய் அனைத்து விளையாட்டிலும் தலைசிறந்த வீரனாய் வெற்றிக்கு வித்திட்ட மத்தியின் மணிவிளக்கே மணிவதனா. உனைப் பிரிந்த இரண்டாண்டில் தந்தை நிலை தாழாத சோகத்தில், தாயாரோ மீளாத கண்ணீரில், உன் சோதரர்கள் மூவரும் சொல்லியழ வார்த்தையின்றி சோகத்தின் விளிம்பில், 94 ஆம் ஆண்டில் துடுப்பாட்ட விளையாட்டில் அணித்தலைவனாய் நீ நின்று மத்திய கல்லூரிக்கு பெற்றுத் தந்த வெற்றியினால் புகழ் மாலை சூடிக்கொண்ட உன் தந்தை தாய் சோதரர்கள் இன்று உனக்கும் உன் தங்கையின் நிழற்படத்திற்கும் பூமாலை சூட்டுவதுடன் கண்ணீரால் சோக பாமாலை பாடுகின்றோம். கண்ணின் மணிகளே உங்கள் பிரிவால் தினம் தினமும் கத்துகின்றோம் கதறுகின்றோம், செந்நீர் கலந்த கண்ணீரால் உங்கள் நிழற்படங்களை கழுவுகின்றோம். ஓ என்று அலறுகின்றோம் ஒப்பாரி வைக்கின்றோம். ஓடி வர நீங்கள் இல்லை. உங்கள் ஆத்மா சாந்தி பெற இறைவனை இறைஞ்சி நிற்கின்றோம்.

**இவர்களின் பிரிவால் துயருறும்**
**குடும்பத்தினருக்கு**
**எமது ஆழ்ந்த அனுதாபங்கள்.**

அன்புடன் பாலு அண்ணா

(45335)

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேஷ்டி கிரியையும்



| மலர்வு: | உதிர்வு: |
|---|---|
| 23 - 04 - 1948 | 19 - 01 - 1997 |

### அமரர் சிங்கராசா சிவராசா
### (தம்பு)

சூரியனே சுடரே போற்றி
நல்லருள் நல்கியே எம்மை
நாளுமே காத்தாய் போற்றி
சிவராசாவே போற்றி போற்றி
பூவடி போற்றி நின்
பொன்மலர்ப் பாதம் போற்றி.

நன்றி

உங்கள் பிரிவால் துயருறும்:
**மனைவி, சகோதரிகள்**
**மைத்துனர்கள், மருமக்கள்.**

டச்சு வீதி,
கண்டுவில் ஒழுங்கை,
சாவகச்சேரி. (45328)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உதயன்

## ஐயாயிரம் எப்போது வரும்?

யாழ்ப்பாணத்தில் — மிகக் குறிப்பாக வலிகாமத்தில் — எல்லோரும் கேட்கும் கேள்வி, யாழ். செயலகத்தில் நடைபெற்ற கூட்டம் ஒன்றிலும் எதிரொலித்திருக்கிறது!

தென்மராட்சிக்கும், வடமராட்சிக்கும், வன்னிப் பிரதேசத்துக்கும் இடம் பெயர்ந்து, மீண்டு வந்து தமது பகுதிகளில் குடியமர்ந்தவர்களில் மிகப் பெரும்பாலானோர் சந்திக்கும் போது, தமக்கிடையே அடிக்கடி கேட்டுக் கொள்ளும் பிரதான கேள்வி அது.

அவர்கள் சார்பில் யாழ். நுகர்வோர் பாதுகாப்புச் சங்கப் பிரதிநிதிகள் அந்தக் கேள்வியை செயலகக் கூட்டத்தில் எழுப்பினர்.

மீளக் குடியமர்வு கொடுப்பனவு 5,000 ரூபாவும் இன்னும் ஏன் அனைவருக்கும் வழங்கப்படவில்லை? — இது தான் அந்தப் ''பொன்னான'' கேள்வி.

இடம் பெயர்ந்து சென்ற ஒவ்வொரு குடும்பத்துக்கும் உண்டான உடைமை இழப்பும் சேதமும் கடல் என்றால், அரசாங்கம் வழங்க நிர்ணயித்திருக்கும் ஐயாயிரம் ரூபாவானதுஒரு சொட்டு துளி எனலாம்.

முதலில் குடும்பம் ஒன்றுக்கு 7,500 ரூபா மீளக் குடியமர்வுக் கொடுப்பனவாக வழங்கப்படும் என்று பிரசாரப்படுத்தப்பட்டது. காரணம் எதுவோ, யாருக்கும் தெரியாது; ஒரு சில வாரங்களிலேயே அந்தத் தொகை 5,000 ரூபாவாகக் குறைக்கப்பட்டு விட்டது.

மீளக் குடியமர வந்தவர்கள் தங்கள் வீடு, வளவுகளைத் துப்புரவாக்கி, கிணறு இறைத்து சிதறுண்டு கிடந்த பொருள்களை தேடி எடுத்து, சரி இந்த வீட்டில் குடியிருக்கலாம் என்ற நிலையை எய்துவதற்குச் செலவிட்ட பணத்துக்கும், உடல் உழைப்புக்கும் இந்த 5,000 ரூபா எம்மாத்திரம்?

அது வேறு கணக்குவேறு.

எப்படியோ, மீளக்குடியமர்வுக் கொடுப்பனவாக வழங்குவதற்கு நிர்ணயிக்கப்பட்ட சிறு தொகையை வழங்குவதில் கூட, தாமதம் காட்டப்படுகிறது. வலிகாமம் மக்கள் மீளக் குடியமர்ந்து ஒரு வருடமாகப் போகிறது. பத்து வீதத்தினருக்கு மட்டுமே இதுவரை அந்தக் கொடுப்பனவு கைக்குக் கிடைத்துள்ளது!

இது விடயத்தில், அரசு இனியும் தாமதம் காட்டக் கூடாது.

தேவைப்படும் போதெல்லாம் போருக்காக நாட்டுக்கு நாடு சென்று ஆயுதங்களையும், இராணுவ தளபாடங்களையும் கொள்வனவு செய்ய நிதிவளம் உண்டென்றால், மீளக் குடியமர்வு கொடுப்பனவை வழங்குவதற்குத்தான் பணமில்லாமல் தாமதமா? என்ற கேள்வி இயல்பாகவே எழுகிறது.

மேலும் தமது நிரந்தர வசிப்பிடத்துக்குத் திரும்பாதவர்களுக்கு மீளக்குடியமர்வுக் கொடுப்பனவு வழங்கப்படாமல் இருப்பதும் நியாயமற்றது. சொந்த இடங்களில் குடியிருக்க முடியாமல் இருப்பதற்கான புறக்காரணிகள் பலவற்றுக்கும் பாதுகாப்பற்ற நிலையே மூலாந்தரம். அது சீராகும்வரை, அவர்கள் நிரந்தர வசிப்பிடங்களுக்குத் திரும்பாமை அவர்களின் பிழையன்று; — நதியின் பிழையன்று நறும்புனல் இன்மை என்பது போல. ஆகையால் அவர்களைப் புறக்கணிப்பது, தண்டிப்பது கோணல் நீதியாகும்.

# கொழும்பு மாநகரசபைத் தேர்தலில் ரெலோ ஏன் போட்டியிடுகின்றது?

## அதன் முதன்மை வேட்பாளர் விளக்கம்

கொழும்பு, பெப். 18

வடக்கு — கிழக்கு மாகாணத்தில் தொடரும் யுத்தம் காரணமாக அப்பாவிப் பொதுமக்கள்பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர். ஆகையால் அரசாங்கம் மூன்றாம் தரப்பு மத்தியஸ்தத்துடன் புலிகள் இயக்கத்துடன் பேச்சுவார்த்தை நடத்த வேண்டும். வடக்கு—கிழக்கு மாகாணம் இணைந்த நிலையில் அரசாங்கம் அரசியல் யோசனைகளை அமுல் நடத்த வேண்டும்.

இவை போன்ற விடயங்களை வலியுறுத்தவே கொழும்பு மாநகரசபைக்கான தேர்தலில் தமிழீழ விடுதலைக் கழகம் (ரெலோ) அதன் கட்சிச் சின்னத்தில் போட்டியிடுகிறது.

இப்படி அதன் செயலாளர் நாயகமும் கொழும்பு மாநகரசபை முதன்மை வேட்பாளருமான எம். சிவாஜிலிங்கம் தெரிவித்துள்ளார்.

ஏனைய தமிழ்க் கட்சிகளின் ஆதரவைப் பெறவுள்ளோம். ஈ. பி. ஆர். எல். எவ், ஈரோஸ் பிரதிநிதிகளைச் சந்தித்துப் பேச்சுவார்த்தைநடத்தியுள்ளோம். தமிழர் விடுதலைக்கூட்டணி, ஈ. பி. டி. பி. ஆகியவற்றின் பிரதிநிதிகளைச் சந்திக்கவுள்ளோம் எனவும் அவர் தெரிவித்தார். (இ-4-5)

# ஐ. தே. க. வேட்பாளர் நையப்புடைக்கப்பட்டார்

## நீர்கொழும்பில் சம்பவம்

கொழும்பு, பெப். 18

நீர்கொழும்பு மாநகர சபைக்கான தேர்தலில் போட்டியிடும் ஐக்கிய தேசியக் கட்சி வேட்பாளரான கஸ்டன் பெர்னாண்டோ என்பவர் நேற்று முன்தினம் நீர்கொழும்பு பஸ் நிலையப் பகுதியில் வைத்து அரசுத் தரப்பு ஆதரவாளர்களினால் நையப்புடைக்கப்பட்டதாகக் கூறப்படுகின்றது.

கலால் திணைக்களத்தின் முன்னாள் பிரதி ஆணையாளரான இவர் படுகாயமுற்ற நிலையில் நீர்கொழும்பு ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டார். (உ-150)

# ரூபா. 1 கோடி பெறுமதியான போதைவஸ்துடன் ஒருவர் கைது!

கொழும்பு, பெப். 18

சுமார் ஒரு கோடி ரூபா பெறுமதியான 'பிறவுண்சுகர்' போதை வஸ்துவுடன் இலங்கையர் ஒருவரை கொழும்புப் பொலீஸார் நேற்று முன்தினம் கைது செய்ததாக அறிவிக்கப்படுகின்றது.

கடந்த வாரமும் இதேயளவு பெறுமதியுடைய பிறவுண் சுகருடன் ஆறு பேரை கொழும்பில் பொலீஸார் கைது செய்திருந்தனர். அவர்களில் நால்வர் ஒரே குடும்பத்தைச் சேர்ந்தவர்களாவர். (உ-150)

# விமானம் காணாமற் போய்விட்டது என்கிறது கொழும்புப் பத்திரிகை

கொழும்பு, பெப். 18

இலங்கை விமானப்படையின் மற்றொரு உளவு விமானம் காணாமல் போயிருப்பது பற்றிய செய்தியை கொழும்பிலிருந்து வெளியாகும் 'த ஐலண்ட்' பத்திரிகையும் நேற்று வெளியிட்டது.

இஸ்ரேல் தயாரிப்பான தானியங்கி உளவு விமானம் கடந்த ஐந்து நாள்களுக்கு முன் அநுராதபுரம் பகுதியில் விழுந்து நொறுங்கியதாக வெரித்தாஸ் வானொலியை மேற்கோள் காட்டி 'உதயன்' நேற்று செய்தி வெளியிட்டிருந்தது தெரிந்ததே.

கடந்த ஜனவரி 17 ஆம் திகதி இதே போன்ற ஆளில்லா உளவு விமானம் ஒன்றை விமானப்படை இழந்தது ஏற்கனவே அறிந்ததே.

அதே வகை விமானம் ஒன்று தற்போது காணாமற் போயிருப்பதாக விடயமறிந்த வட்டாரங்களை மேற்கோள்காட்டி 'த ஐலண்ட்' நேற்று செய்தி வெளியிட்டது. (உ-150)

# பரீட்சைக்குத் தோற்ற முடியாத நிலையில் யாழ். உத்தியோகத்தர்

## இங்கு நடத்த முடியாதா என்று கேள்வி

யாழ்ப்பாணம், பெப். 18

எழுதுநர் சேவையிலும் அதனோடிணைந்த சேவைகளிலும் தரம் இரண்டு 'அ' பிரிவிலுள்ள உத்தியோகத்தர்களுக்கான வினைத்திறமை காண் தடைப் பரீட்சைக்குத் தோற்ற முடியாத நிலை யாழ். மாவட்ட உத்தியோகத்தர்களுக்கு ஏற்பட்டுள்ளது.

மேற்படி பரீட்சை எதிர் வரும் சனிக்கிழமை கொழும்பில் நடைபெறவுள்ளது.

யாழ்.மாவட்ட பரீட்சார்த்திகளுக்கான அனுமதி அட்டைகள் நேற்று முன்தினமே கிடைத்துள்ளதாகச் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

சென்ற வருடமும் யாழ். பரீட்சார்த்திகளுக்கான பரீட்சை நிலையம் மட்டக்களப்பில் அமைக்கப்பட்டதால் பரீட்சார்த்திகள் பரீட்சைக்குத் தோற்றமுடியாமல் போய்விட்டதாக தெரிவிக்கப்பட்டது.

தகுதிகள் இருந்தும் தாம் வருடா வருடம் பின்னோக்கி தள்ளப்படும் இந் நிலையை மாற்ற இங்கேயே பரீட்சை நடத்துவதற்கு சம்பந்தப்பட்ட அதிகாரிகள் நடவடிக்கை எடுக்கமாட்டார்களா? என்று மேற்படி உத்தியோகத்தர்கள் கேட்கின்றனர். (இ-4)

**நாளை**

**மாசி 8**

**புதன்கிழமை**

**திதி:** துவாதசி முற்பகல் 10-49 வரை.

**நட்சத்திரம்:** புனர்பூசம் பிற்பகல் 3-45 வரை.

பிரதோஷ விரதம்

**ராகுகாலம்:** 12.32-2.02

**சுபநேரம்:** 5.02-6.32 (பகலுக்கும் இரவுக்கும் பழைய நேரப்படி)

# கச்சாய்க் கடலில் மீன் பிடிக்க அனுமதி

தென்மராட்சி, பெப். 18

கச்சாய்க் கடல் ஏரியில் சுமார் ஒரு மைல் தூரம் சென்று மீன் பிடிக்க தற்போது படையினர் அனுமதி வழங்கியுள்ளனர்.

மீன்பிடிக்கச் செல்பவர்கள் கச்சாய் துறைமுக காவலரணில் தமது அடையாள அட்டையை ஒப்படைத்து விட்டு நடந்து சென்றே மீன் பிடிக்க முடியும். (ஐ-117)

# சப்பிரகமுவா மாகாணத்தில் ராணுவமும் தேர்தல் கடமையில்

கொழும்பு, பெப். 18

உள்ளூராட்சித் தேர்தலை ஒட்டி சப்பிரகமுகா மாகாணத்தில் பெரும் பதற்றம் ஏற்பட்டிருப்பதால் அங்கு தேர்தல் கடமைகளில் பொலீஸாருக்கு மேலதிமாக இராணுவத்தினரையும் சேர்த்துக் கொள்ள வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

— இவ்வாறு பாதுகாப்பு வட்டாரங்கள் அரசுக்கு ஆலோசனை கூறியுள்ளன.

தற்போது பரவலாக இடம் பெற்று வரும் வன்செயல்களைப் பார்க்கும் போது எதிர்வரும் மார்ச் 21 ஆம் திகதி நடக்கவிருக்கும் உள்ளூராட்சித் தேர்தலை திட்டமிட்டபடி நடத்தி முடிப்பதற்கு விசேட பாதுகாப்புத் திட்டம் ஒன்று தயாரிக்கப்பட்டு, செயற்படுத்தப்பட வேண்டியது அவசியம் என்றும் பாதுகாப்பு வட்டாரங்கள் அரசுக்கு ஆலோசனை கூறியுள்ளன. (உ-150)

# முத்திரைக்கு தட்டுப்பாடு

செம்பியன்பற்று, தாளையடி உபதபாலகங்களில் முத்திரை வகைகளுக்குத் தட்டுப்பாடு நிலவுகிறது.

இப்பகுதி மக்கள் முத்திரைகளை வாங்குவதற்காக வேறு இடங்களுக்கு அலைந்து திரிவதைக் காணமுடிகிறது.

# வடக்கு அபிவிருத்தி...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

★ நாடாளுமன்ற உறுப்பினர்கள், அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகள், சிரேஷ்ட பிரஜைகள், கல்விமான்கள், அரசாங்க உத்தியோகத்தர்கள் ஆகியோரை உள்ளடக்கியதாக வடபகுதி அபிவிருத்தி அதிகார சபை இருக்க வேண்டும்.

### கைதாவோர் விவரம்

★ சந்தேகத்துக்கிடமான முறையில் பொதுமக்கள் கைதுசெய்யப்படும் போது கையாளப்பட வேண்டிய நடைமுறைகள் மீளமைக்கப்பட வேண்டும்.

கைது செய்ய வருவோர் அவர்களது ஆள் அடையாள விவரங்களைச் சரிவரக் காண்பிக்கத் தவறி விடுகின்றனர். கைதாவோரின் உறவினர்களும், பெற்றோர்களும் செய்வதறியாது முகாம்களுக்கும், பொலீஸ் நிலையங்களுக்கும் அலைய வேண்டியுள்ளது.

எனவே, கைதுசெய்யும் நடவடிக்கைகளை மேற்கொள்வோர் தமது ஆள் அடையாள விவரத்தை தகுந்த வகையில் வெளியிட வேண்டும்.

கைது செய்யப்படுவோரின் விவரங்கள் தகுந்த வகையில் கிராம சேவகர்கள் மூலமாக வெளியிடப்படல் வேண்டும்.

★ விலைகளைக் குறைத்து தரமான பொருள்களை யாழ். குடா நாட்டு மக்களுக்கு விநியோகிக்க ஆவன செய்ய வேண்டும்.

★ சரக்குக் கப்பல்களில் பொருள்கள் தாராளமாக ஏற்றப்பட்டு துரிதமாக அவை வடக்குக்கு அனுப்பி வைக்கப்பட வேண்டும்.

★ கப்பலிலிருந்து பொருள்களை இறக்கும் படகுகளின் எண்ணிக்கையை அதிகரிக்க வேண்டும்.

★ அரசாங்கக் களஞ்சியங்களில் போதுமானளவு பொருள்களை உறுதி செய்ய வேண்டும்.

★ அரசாங்கத்தினால் வட பகுதிக்கு தரமான பொருள்களை அனுப்பி வைக்கும் நடைமுறையை ஏற்படுத்த வேண்டும்.

★ யாழ்ப்பாணத்தில் கூ. மொ. வி. நிர்வாகத்தை மீளமைக்கும் உடனடி நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும். அத்துடன் தரமான பொருள்கள் மக்களுக்கு தாராளமாகக் கிடைப்பதை உறுதி செய்யும் நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட வேண்டும்.

★ யாழ். குடாநாட்டுக்கான மின்சார விநியோகம் துரிதப்படுத்தப்படவேண்டும். யாழ். மாநகர சபைப் பகுதிக்குள் மின்சாரம் வழங்கும் முதல் கட்ட நடவடிக்கையாக மின்மாற்றிகள்; மின் உப நிலையங்கள் என்பவற்றை திருத்தியமைப்பதில் நிலவும் தாமதங்களையும் தவிர்க்க அரசு முன்வரவேண்டும்.

★ யாழ்ப்பாணப் போதனா வைத்தியசாலை உட்பட யாழ். மாவட்டத்தில் உள்ள அனைத்து வைத்தியசாலைகளிலும் நிலவும் மருத்துவப் பொருள்களின் பற்றாக்குறைகளை நீக்க உடனடி நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவேண்டும்.

★ வடக்கே மலேரியா தடுப்பு நடவடிக்கை மேற்கொள்ளப்படவேண்டும். அத்துடன் சுகாதாரத் திணைக்களத்தில் நிலவும் குறைகளையும் நிவர்த்தி செய்ய முன்வர வேண்டும்.

### தபால் சேவை

★ யாழ்ப்பாணக் குடாநாட்டுக்கும் நாட்டின் ஏனைய பகுதிகளுக்குமிடையிலான தபால் சேவை சீரமைக்கப்பட வேண்டும். இதில் நிலவும் தாமதங்கள், தட்டுப்பாடுகள் நீக்கப்படவேண்டும்.

★ யாழ். மாவட்டத்தில் யாழ் வைத்தியசாலைக் கழிவுப் பொருள்கள் உட்பட நகரின் கழிவுளை கொட்டும் நடவடிக்கை பாதுகாப்பு நடைமுறைகள் காரணமாகப் பாதிக்கப்பட்டுள்ளது. நகரின் சுகாதாரத்துக்கு இக் கழிவுப் பொருள்கள் ஊறு விளைவிக்கின்றன. ஆயுதப் படையினர் இப்பிரச்சினையை நிவர்த்தி செய்யும் நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்.

★ இடம்பெயர்ந்த முஸ்லிம் மக்களை யாழ்ப்பாணத்துக்கு மீளவும் வரவும், அவர்களது சேதங்களை மதிப்பிடவும், வர்த்தக முயற்சிகளையும், தொழில் முயற்சிகளையும் அவர்கள் அங்கு மீளவும் ஆரம்பித்து நிரந்தரமாக வாழ விரும்பினால் அதற்கான உரிய பாதுகாப்பையும் உதவிகளையும் வழங்க வேண்டும்.

★ சகல பொதுக் கட்டடங்களையும் வழிபாட்டுத் தலங்களையும் மீளக் கட்டும் திட்டமொன்று தயாரிக்கப்பட்டு அமுலாக்கப்பட வேண்டும். (அ-உ-150)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இரு பொலிஸ்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

டைந்தனர். புலிகள் தரப்பில் பலத்த இழப்புகள் ஏற்பட்டிருக்கலாம் என நம்பப்படுவதாக மேலும் தெரிவிக்கப்பட்டது. (இ–4)

## முன்னாள்...

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

பொலீஸாருக்கு வழங்கினார்.

மகிந்த ரட்ணதிலகாவும் ஏற்கனவே கைதான பத்து சந்தேகநபர்களும் எதிர்வரும் வியாழக்கிழமை அடையாள அணிவகுப்பில் நிறுத்தப்பட உள்ளனர்.

அதே சமயம் இரத்தினபுரி மாவட்டத்தில் நேற்று இரவு 7.00 மணி முதல் இன்று காலை 6.00 மணி வரை ஊரடங்கு அமுலில் இருந்தது. (இ-4)

## வாழைச்சேனை..

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

பொதுமக்கள் காயமடைந்தனர்.

காயமுற்றோர் உடனடியாக வாழைச்சேனை ஆஸ்பத்திரிக்கு எடுத்துச் செல்லப்பட்டனர். அவர்களில் நால்வர் மேலதிக — அவசர — சிகிச்சைக்காக மட்டுநகர் ஆஸ்பத்திரிக்கு எடுத்துச் செல்லப்பட்டனர்.

ஓட்டமாவடிப் பகுதியில் முஸ்லிம் மக்களின் குடியிருப்புப்பகுதி மீது கடந்த வாரம் இடம்பெற்ற ஷெல் தாக்குதலுக்கு பதிலடியாக வாழைச்சேனைத் தாக்குதல்கள் இடம்பெற்றிருக்கலாம் எனச் சந்தேகிக்கப்படுகின்றது. (உ–150)

## "பரல்" இன்றி அவதி

யாழ்ப்பாணம், பெப். 18

யாழ்ப்பாணம் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம் தனக்குரிய மண்எண்ணெயை சேகரித்து இளைகளுக்கு விநியோகிப்பதற்கு 'பரல்கள்' இன்றி பெரும் சிரமங்களை எதிர்நோக்கியுள்ளது.

கடந்த கால இராணுவ நடவடிக்கைகளின் போதும், அதனைத் தொடர்ந்தும் சங்கத்தின் கைவசம் இருந்த 300 க்கும் மேற்பட்ட 'பரல்'கள் சேதமடைந்து விட்டதாகக் கூறப்படுகிறது. (இ-15)

## கலந்துரையாடல்

யாழ்ப்பாணம், பெப். 18

சமூகசேவை உத்தியோகத்தர்கள் அனைவரையும் நாளை செயகலத்தில் நடைபெறவுள்ள கலந்துரையாடலில் கலந்து கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டிருக்கிறது. (ஐ)

## கப்பல் ..

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

புதிய கட்டண விவரம் வருமாறு:-

★ பயணிகள் கப்பலில் பயணம் செய்யும் ஒருவருக்கு 750 ரூபா.

★ சரக்குக் கப்பலில் பயணம் செய்யும் ஒருவருக்கு 600 ரூபா.

★ ஒருபயணி இங்கிருந்து 20 கிலோவுக்கு மேற்பட்ட பொருள்களை எடுத்துச் செல்ல அனுமதிக்கப்படமாட்டாது. (இ-3)


# நெஞ்சத்தை உருக்கிடும் நீங்காத நினைவலைகள்

தோற்றம்: 23 — 10 — 1975



மறைவு: 18 — 02 — 1995

செல்வன்

## சற்குணமூர்த்தி மணிவதனன்

(முன்னாள் யாழ். மத்தியகல்லூரி மாணவனும் வெற்றிக்கு வித்திட்ட 1994 ஆம் ஆண்டின் கிரிக்கெட் அணித்தலைவரும்)

2 ஆம் ஆண்டிற் கண்ணீருடன் கூடிய செந்நீர் அஞ்சலிகள்

சற்குண ருக்மணி பெற்றெடுத்த நற்குண
மணிவதனா ஜெயச்சித்ரா
நீங்கள் இருவரும் எம்மைப் பிரிந்துஇரண்டாண்டுகள்
ஆகின்றன.
மத்தியின் மணிவிளக்காய் மத்திய கல்லூரியில்
நீ படைத்தசாதனைகள் மைல்க் கல்லாய்த்தெரி
யுதடா தம்பி!
உனக்கு நீயே நிகர்
அனைத்து ஆர்வலர்களையும் ஆட்கொண்ட வீரன் நீ
துடுப்பாட்டத்திற்கு இலக்கணம் வகுத்தவனே
எடுப்பான அடி வீச்சு இனி எப்போ காண்பது?
துடிப்பான துடுப்பாட்ட விளையாட்டால் எம்
நெஞ்சில் நிறைந்தவனே
உன் மறைவு எமக்கே சொல்லொண்ணா சோகம்
தருகுதெனில்
உன் குடும்பத்தார் சோக நிலை சொல்லவும்
வேண்டுமோ?

உங்களை பிரிந்து சோகமுறும் குடும்பத்தாருக்கு ஆழ்ந்த அனுதாபங்கள்.

உங்கள் இருவரின் ஆத்மாவும் சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

**P. J. பெர்னாண்டோ**

3 ஆம் குறுக்குத் தெரு, யாழ்ப்பாணம்
ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்

(45334)


## உயிருக்கு...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

தெரிவித்திருப்பதாவது:-

எனக்கு எதிராக அரசு பெருத்த எடுப்பில் பொய்ப் பிரசாரம் செய்து வருகின்றது. இந்த நிலையில் நான் சரணடைவது எனது உயிருக்கு ஆபத்தை விளைவிக்கும்.

அரசின் பொய்ப்பிரச்சாரத்தினால் எனது நண்பர்கள், உறவினர்களின் வீடுகள் நாசமாக்கப்பட்டுள்ளன.

அத்தோடு நான் சரணடையும் பட்சத்தில் எனக்கு எதிரான வழக்கு இரத்தினபுரி மாவட்டத்தில் நடைபெற்றால் அதுவும் எனது உயிருக்கு ஆபத்தை ஏற்படுத்தும்.

எனவே இந்த நடவடிக்கை இரத்தினபுரி மாவட்டத்துக்கு வெளியில் உள்ள ஒரு நீதிமன்றத்துக்கு மாற்றுவதற்கும் —

எனது உயிருக்கு உத்தரவாதம் அளிப்பதற்கும் —

எனக்கு எதிரரன பொய்ப் பிரசாரத்தை நிறுத்துவதற்கும் —

அரசுத் தரப்பு இணங்கினால் சரணடைவதற்கு நான் தயாராக இருக்கிறேன். — என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (உ-150)

## தந்தை...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

துணைத் தலைவர்கள்:- நீலன் திருச்செல்வம், பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவின் உப தலைவர் பேராசிரியர் சி. பத்மநாதன், தமிழர் விடுதலைக் கூட்டணிச் செயலாளர் நாயகம் ஆர். சம்பந்தன், நாடாளுமன்ற உறுப்பினர் ஜோசப் பரராஜசிங்கம் மற்றும் வி. எஸ். துரைராஜா.

இணைச் செயலாளர்கள்:- மாவை சேனாதிராஜா, ஆர். பேரின்பநாயகம்.

இணைப் பொருளாளர்கள்:- வீ. ஆனந்தசங்கரி, வீ. ஆர். வடிவேற்கரசன்.

நிதிக்குழு, வெளியீட்டுக் குழு, கலாசாரக் குழு, பிரசாரக் குழு, கலாசார மேம்பாட்டுக் குழு, வெளிநாட்டுத் தொடர்புக்குழு ஆகியவையும் இந்தக் கூட்டத்தில் தெரிவு செய்யப்பட்டன.

எதிர்வரும் ஏப்ரல் மாதம் 26 ஆம் திகதி வரும் தந்தை செல்வாவின் பிறந்த தினத்தை ஒட்டி கொழும்பு பண்டாரநாயக்கா சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் விழா ஒன்று நடைபெறும். உள்நாட்டு மற்றும் தமிழக அறிஞர்கள், பிரமுகர்கள் இந்த நிகழ்வில் பங்குகொள்வர்.

அதனைத் தொடர்ந்து நூற்றாண்டு வருடத்தில் மாதந்தோறும் யாழ்ப்பாணம், வன்னி, திருகோணமலை, மட்டக்களப்பு, அம்பாறை ஆகிய பகுதிகளில் விசேட கூட்டங்கள் நடைபெறும்.

தந்தை செல்வாவின் நூற்றாண்டு வருடம் ஆரம்பமாவதற்கு முதல் நாள் — எதிர்வரும் மார்ச் 30 ஆம் திகதி— மாலை ரூபவாஹினியில் தந்தை செல்வா பற்றிய கலந்துரையாடல் நடைபெறும். தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைவர் எம். சிவசிதம்பரம் அதில் பங்கு பற்றுவார்.

அடுத்த நாள் நுற்றாண்டு வருடத்தின் முதல் நாள் கோயில்கள், தேவாலயங்கள், மசூதிகள் ஆகியவற்றில் விசேட பூஜை, வழிபாடுகள் இடம்பெறும்

நூற்றாண்டுவிழா நிகழ்ச்சி பம்பலப்பிட்டி புதிய கதிரேசன் மண்டபத்தில் நடைபெறும். இந்த விழாவிலும் தமிழக அறிஞர்கள் பங்குபற்றுவர்.

கொழும்புச் செய்திகள் இத்தகவலைத் தெரிவித்தன. (உ–150)

# அகதிகள் அல்லாத 9 ஆயிரம் பேர் திருகோணமலையில் தவம் கிடப்பு

திருகோணமலை, பெப். 18

யாழ்ப்பாணம் வருவதற்கு கப்பல் வசதியின்றி அகதிகள் அல்லாத 9 ஆயிரம் பேர் திருகோணமலையில் காத்துக் கிடப்பதாகத் தெரிவிக்கப்பட்டது.

வவுனியாவில் இருந்து திருகோணமலை வரும் அகதிகள் மட்டுமே கப்பல் மூலம் யாழ்ப்பாணம் அனுப்ப ஏற்பாடு செய்யப்படவேண்டும் என்று கொழும்பில் இருந்து கிடைத்த உத்தரவையடுத்து திருமலை அதிகாரிகள் அகதிகள் அல்லாதவர்களை கப்பலில் ஏற்ற மறுத்து வருகின்றனர்.

இதனால் தனிப்பட்ட வேலைகளுக்கு சென்றோர், அரச ஊழியர்கள், மாணவர்கள் என்று அங்கு தரித்து நிற்கும் 9 ஆயிரம் பேர் கப்பல் மூலம் பயணம் செய்ய முடியாத நிலையில் உள்ளனர் என்று தெரிவிக்கப்படுகின்றது.

திருகோணமலை நகரசபைக் கட்டடத்தில் தங்கியுள்ள இவர்கள் பெரும் நெருக்கடிகளை எதிர்நோக்குவதாகத் தெரிவிக்கப்பட்டது.

**தற்கொலை பயமுறுத்தல்**

யாழ்ப்பாணம் வருவதற்காக திருகோணமலை நகரசபைக் கட்டடத்தில் தங்கியுள்ள யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த பெண் ஒருவர் தற்கொலை பயமுறுத்தல் விடுத்துள்ளார்.

சொந்த அலுவலாகக் கொழும்பு சென்று மீளவும் யாழ்ப்பாணம் வருவதற்காக திருகோணமலை வந்து அங்கு காத்துக் கிடக்கும் பெண் ஒருவரே இப்படிப் பயமுறுத்தல் விடுத்துள்ளார்.

'யாழ்ப்பாணம் செல்ல எனக்கு இன்னமும் அனுமதி தரவில்லை. அனுமதி தரப்படாவிட்டால் எனது பிள்ளையையும் கடலில் வீசி நானும் கடலில் குதித்து தற்கொலை செய்யப் போகிறேன்' என்று அந்தப் பெண் தெரிவித்துள்ளார்.

திருகோணமலை நகரசபையில் தங்கியுள்ள அகதிகள் அல்லாத 9 ஆயிரம் பேருடன் இந்தப் பெண்ணும் ஒருவர். (இ-3-150)

## ரைஸ்ரார்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

விபத்து என்று அறிவிக்கப்படுகிறது.

ஜனவரி 17 ஆம் திகதி இஸ்ரேல் தயாரிப்புத் தன்னியக்க உளவு விமானம் ஒன்று பூநகரிப் பகுதியில் விழுந்து நொறுங்கியது.

ஜனவரி 20 ஆம் திகதி வை-12 ரக கண்காணிப்பு விமானம் ஒன்றுபலாலியில் இருந்து 75 மைல் தூரம் பறந்த நிலையில் காணாமற் போய் விட்டது.

ஜனவரி 21 ஆம் திகதி இஸ்ரேல் தயாரிப்பு கிபிர் விமானம் நீர்கொழும்பு வாவியில் விழுந்தது.

பெப்ரவரி 12 ஆம் திகதி தானியங்கி உளவு விமானம் அனுராதபுரத்தில் விழுந்தது.

'ரைஸ்ரார்' விமானம் நேற்று விபத்துக்குள்ளான காரணத்தைக் கண்டறிவதில் நிபுணர்கள் ஈடுபட்டுள்ளனர்

இந்த விமான விபத்து இடம்பெற்றபோதிலும் கட்டுநாயக்கா சர்வதேச விமான நிலையத்தில் விமானச் சேவை வழமைபோல் இடம்பெற்றதாகத் தெரிவிக்கப்பட்டது. (இ-10-4)

## யாழ்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

படைக்கப்பட்டன.

இச்சடலங்களில் ஒன்றில் இருகைகளும், நெஞ்சின் ஒரு பகுதியும் சிதறுண்டு காணப்பட்டன. ஏனைய இரண்டு சடலங்களிலும் துப்பாக்கிச் சூட்டுக்காயங்கள் காணப்பட்டன.

பெயர் விவரங்கள்தெரிவிக்கப்படாத இம் மூன்று சடலங்களும் பிரேத பரிசோதனைக்காகவும், இனங்காண்பதற்காகவும் ஆஸ்பத்திரி பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளன.

ஞாயிற்றுக்கிழமை மட்டுவில் பருத்தித்துறை வீதியில் இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தில் மரணமானதாக நடராசா பிரபாகரன் (வயது21)என்பவரின் சடலமும், வரணி நாவற்காடு பகுதியில் இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தில் உயிரிழந்ததாக யோகேஸ்வரசர்மா (வயது 22) என்பவரின் சடலமும் நேற்று முன்தினம் மாலை சாவகச்சேரிப் பொலீஸாரால் ஒப்படைக்கப்பட்டன.

இரு சடலங்களினதும் ஊர் விபரம் தெரியவரவில்லை. பெயர்கள் பொலீஸாரால் தெரிவிக்கப்பட்டன.

இச்சடலங்களும் பிரேத பரிசோதனைக்காக ஆஸ்பத்திரி பிரேத அறையில் வைக்கப்பட்டன.

கடந்த மூன்று நாள்களில் 8 சடலங்கள் சாவகச்சேரி பொலீஸாரால் யாழ். ஆஸ்பத்திரியில் ஒப்படைக்கப்பட்டுள்ளன.

இதேசமயம் முகமாலை பிரதேசத்தில் தாக்குதல் நடத்த முற்பட்ட விடுதலைப் புலிகள் மீது படையினர் பதில் தாக்குதல் நடத்திய போது 3 விடுதலைப் புலி உறுப்பினர்கள் உயிரிழந்ததாக பாதுகாப்பு அமைச்சு தெரிவித்தது.

படையினரின் பாதுகாப்பு முன் அரண்கள் மீது நேற்று அதிகாலை விடுதலைப் புலிகள் இந்தத் தாக்குதலை மேற்கொண்ட தேடுதலின் போது விடுதலைப் புலிகளின் 3 சடலங்களும் ஆயுதங்களும் தோட்டாக்களும் கண்டெடுக்கப்பட்டன என்று மேலும் தெரிவிக்கப்பட்டது. (இ-4-15)

## தையல் இயந்திரங்கள்

தென்மாரட்சி, பெப். 18

பளைப் பிரதேச செயலகத்திற்கு கிராமிய அபிவிருத்தித் திணைக்களத்தினால் நான்கு தையல் இயந்திரங்களும்அதற்கான உபகரணங்களும் வழங்கப்பட்டுள்ளன.

தையல் இயந்திரங்கள் கிடைத்திருப்பதை அடுத்து இப் பகுதி யுவதிகளுக்கான தையல் பயிற்சி விரைவில் ஆரம்பிக்கப்படவுள்ளது.

இப்பயிற்சிவகுப்பில் கலந்து கொள்ள விரும்பும் யுவதிகள் பளைப்பிரதேச செயலகத்தில் பெயர்களைப் பதிவு செய்யுமாறு பளைப்பிரதேசசெயலக கிராமிய அபிவிருத்தி அலுவலர் மு. அழகேந்திரன் தெரிவித்தார். (ஐ-117)

## நிபந்தனையற்ற..

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

டத்தில் இது தொடர்பான தீர்மானம் எடுக்கப்பட்டதாக கட்சியின் செய்தித் தொடர்பாளர் வி. என். காட்கில் செய்தியாளர்களிடம் தெரிவித்தார்.

ஐக்கிய முன்னணி அரசுக்கு அதன் நடவடிக்கைகள், கொள்கைகள் ஆகியவற்றின் அடிப்படையில் மட்டும் காங்கிரஸ் இனி ஆதரவு அளிக்கும் என்றும் அறிவிக்கப்பட்டது.

ஐக்கிய முன்னணி அரசை எதிர்ப்பது என்று காங்கிரஸ் முடிவு செய்தால் தாமும் அதற்குத் தயார் என்று பாரதீய ஜனதா கட்சி சமீபத்தில் தெரிவித்திருந்தது தெரிந்ததே.

காங்கிரஸும் பாரதீய ஜனதாவும் ஐ. முன்னணிக்கு எதிராக வாக்களிக்குமானால் ஐ முன்னணி கவிழ்ந்து விடும் ஆபத்து இருந்து வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது. (இ-10-4)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிரைவேட்) லிமிடெட்டினரால்யாழ்ப்பாணம், நாவலர் வீதி, 292/2 இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 18 - 02 - 1997 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org